Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 25 இதழ் - 1 ஜனவரி 2012

தனிப் பிரதி ரூ. 9/-



## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

❊ வரும் 2012–ம் ஆண்டிலும் திருமறை ஆசான் இதழை பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் கடித மூலம் எங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காதவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து பத்திரிக்கை நிறுத்தப்படும்.

❊ இந்த பத்திரிக்கை ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குங்கள்.

❊ திருமறை ஆசான் மாத இதழை ஆன்மீக சிந்தை உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

## திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை | TV | ஞாயிறு | காலை | 5:30 – 6.00 |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7.00 – 7.15 |
| தமிழன் | TV | சனி | காலை | 7.15 – 7.30 |

இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து உண்மை சத்தியத்தை அறிந்து கீழ்ப்படியுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1 . ஆசிரியர் உரை .................................... 1

2 . ஏன் நாங்கள் சாத்தான் இருப்பதை விசுவாசிக்கிறோம் ? .............................. 9

3 . நிழலும், நிஜமும் .................................. 15

4 . பெண்கள் பகுதி .................................. 19

5 . வாலிபர் பகுதி ........................................ 22

6 . சிறுவர் பகுதி ........................................ 25

7 . சபையும், சந்தோஷமும் ...................... 27

8 . வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ...................... 30


✦ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

✦ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

✦ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

✦ M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.

✦ அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 25 JANUARY 2012 Issue - 1


ஆசிரியர் உரை

## நீ விட்டு வந்த எகிப்து தேசம் போல் இராது

உண்மையில், மண்ணுக்கான மனிதனின் வாழ்க்கை என்பது ஒரு "கடந்து போகுதலாகவே" உள்ளது. ஆம், அது எப்போதும் ஒரு நிலையிலிருப்பதில்லை. ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குக் கடந்து, ஒரு மாற்றத்தைச் சந்தித்துக் கொண்டேயுள்ளது. அப்படி ஏற்படும் மாற்றம் முன்னேற்ற மாகவும் இருக்கலாம் அல்லது ஏமாற்றமாகவும் இருக்கலாம். ஆனால், மாற்றத்திற்கு மட்டும் மாற்றமிருக்காது. இப்படி, ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குக் கடந்து போய் மாற்றம் ஏற்படும் போது, மனித மனங்களுக்குள்ளாக ஓர் ஒப்பிடுதல் நடக்கும். அந்த ஒப்பிடுதல் மனதிற்குள் மௌனமானதாகவோ, வெளிப்படையான விவாதம் சார்ந்ததாகவோ இருக்கும். அது, நாம் விட்டு வந்ததற்கும், பெற்றிருப்பதற்குமான ஓர் ஒப்பீடாக வோ அல்லது நாம் பெற்றிருப்பதற்கும், இனிமேல் பெறப் போவ தற்குமான ஓர் ஒப்பீடாகவோ இருக்கும். இப்படிப்பட்ட ஒப்பிடு தலை தங்கள் வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் நடத்தாத வர்கள் யாருமே இருக்க முடியாது.

மனிதனுக்குள்ளாக இப்படி ஒண்டியும், மண்டியும் கிடக்கும் இந்த ஒப்பிடும் எண்ணத்தை அறிந்த சர்வ வல்ல தேவன், தன்னு டைய ஜனமாகிய இஸ்ரவேலர்களும் இதற்கு விதி விலக்கான வர்கள் அல்ல என்பதைக் கண்டு, தன் தாசனாகிய மோசேயைக் கொண்டு இவ்விதம் பேசியுள்ளார். " *நீங்கள் சுதந்தரிக்கப் போகிற தேசம் நீ விட்டு வந்த எகிப்து தேசம் போல் இராது; அங்கே நீ விதையை விதைத்து, கீரைத் தோட்டத்திற்கு*

*நீர் பாய்ச்சுகிறது போல உன் காலால் தண்ணீர் பாய்ச்சி வந்தாய். நீ சுதந்தரிக்கப்போகிற தேசமோ, மலைகளும், பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம்; அது வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தேசம். அது, உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்க முதல் வருஷத்தின் முடிவு மட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின் மேல் வைக்கப்பட்டிருக்கும்"* என்று. (உபா. 11:10-12)

அன்பானவர்களே, பரலோக தேவனுடைய காக்கும் கரம் நம்மை ஒரு புதிய ஆண்டுக்குள்ளாக அழைத்து வந்துள்ளது. முடிந்து போன வருடத்தில் நாம் சந்தித்த பல்வேறு இன்னல்களை, சவால்களை ஒருவாறாக மறந்து, மிகுந்த நம்பிக்கையோடு இவ்வாண்டுக்குள்ளாகப் பிரவேசித்து நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறோம். இச்சூழ்நிலையில் தேவனால் இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட இவ்வசனங்கள் நம் ஒவ்வொருவருக்கும் இவ்வாண்டுக்கான தைரியத்தைக் கொடுக்கக் கூடியதாக உள்ளது. எப்படியெனில், தேவனுடைய வழிநடத்துதல் "...வருடத்தின் துவக்க முதல், வருடத்தின் முடிவு மட்டும்" எப்பொழுதும் உனக்கு என்று இங்கே சொல்லப்பட்டுள்ளது. கர்த்தர் கொடுத்த இவ்வருடம் முழுவதும் கர்த்தருடைய அநுக்கிரகம் நமக்குக் கிடைக்க வேண்டுமென்பது தானே நம் ஒவ்வொருவரின் ஆசை. இந்த ஆசை நிறைவேறும்படியான வாக்குத்தத்த வார்த்தைகள் வாக்குமாறாத சர்வ வல்ல தேவனிடத்திலிருந்து நமக்குக் கிடைத்திருக்கிறது.

இச்சீர்மிகு வசனப் பகுதியின் உள்ளார்ந்த பொருளை மேலும் சிறப்பாகப் புரிந்து கொள்வதற்கு, திருமறை ஆசானின் வழக்கத்தின்படியாக இதன் பின்னணி என்னவென்று கொஞ்சம் பார்த்து விடுவோம்.

ஒரு 120 ஆண்டுகள் நிறைவடைந்த, பழுத்த தேவ மனிதனாகிய மோசேயின் உரையாடல்களையும், பிரிவு உபச்சார பிரசங்கங்களையும் உள்ளடக்கியது தான், ஆகமங்களின் கடைசி நூலாகிய உபாகமம். மோசே செய்த மூன்று தொடர் பிரசங்கங்களில் இந்த வேத பகுதி இரண்டாவதில் இடம் பெற்றுள்ளது. லேவியராகமம் புத்தகம் போல் இது ஆசாரியர்களுக்கானவைகளைப் பிரதானமாகக் கொண்டிராமல், சராசரி இஸ்ரவேலர்களுக்கான போதனைகளைத் தாங்கியுள்ளது. "கர்த்தர்","உன் தேவனாகிய கர்த்தர்" போன்ற வார்த்தைகளும், சொற்றொடர்களும் 500க்கும் மேலான இடங்களில் இதில் இடம் பெற்றுள்ளது. தேவதாசனாகிய மோசே இவ்வார்த்தைகளை உதிர்த்திருப்பதால், இஸ்ரவேலர்கள் இவ்வார்த்தைகளை மனித வார்த்தைகளாக எடுத்துக் கொள்ளாமல், தேவ வார்த்தையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதே இப்படி குறிப்பிடப்பட்டிருப்பதற்கான எதிர்பார்ப்பு. 40 ஆண்டு கால வனாந்திர யாத்திரையில் அழிந்து

போகாமல் தப்பித்த இரண்டாம் தலைமுறை இஸ்ரவேலர்களிடம் இங்கே மோசே பேசியுள்ளார். வாக்குத்தத்த பூமியாகிய கானானுக்குள் பிரவேசிக்க புதிய தலைமுறை இஸ்ரவேலர்கள் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களிடம் தான் இந்த வார்த்தைகள் பேசப் பட்டுள்ளது.

எப்பொழுதுமே புதியது என்பது மகிழ்ச்சி தரத்தக்கது தான் என்றாலும், அதை அடைந்து கொள்வதற்கு முன்பாக இனம் புரியாத ஒருவித பதற்றம் காணப்படும். இந்த அனுபவம் நம் எல்லோருக்குமே உண்டு. இப்படிப்பட்ட ஓர் உணர்வு கானானுக்குள் பிரவேசிக்கக் காத்துக் கொண்டிருந்த புதிய தலைமுறை இஸ்ரவேலர்களிடம் மிகுந்து காணப்பட்டது. எப்படியிருக்குமோ என்ற கவலையும், என்ன நடக்குமோ என்ற அச்சமும் வெளிப் பட்டது. இதை அறிந்த தேவன் மோசேயைக் கொண்டு, அவர் களுடைய கவலை என்ற காயத்துக்கு மருந்து தடவி, அச்சம் என்ற வலிக்கு தைரியம் என்னும் டானிக் கொடுத்து அவர்களுடைய புதிய வாழ்க்கை தன்னுடைய பராமரிப்பைக் கொண்டதாக இருக்கும் என்று அழுத்தம், திருத்தமாக வாக்களித்துள்ளார்.

கடினமான வனாந்திர யாத்திரையைப் பல ஆண்டுகள் கடந்து, வாக்குத்தத்த பூமியாகிய புதிய தேசத்துக்குள் பிரவே சிக்கத் தங்களை ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கையில், சரீரப் பிரகாரமான இஸ்ரவேலர்களிடம் பேசப்பட்ட இவ்வார்த்தைகள், புதிய ஆண்டுக்குள் அடியெடுத்து வைத்து, கர்த்தர் கொடுத்த இப்புதிய ஆண்டு எப்படியிருக்குமோ, இப்புதிய ஆண்டின் சவால்களை எப்படிச் சந்திக்கப் போகிறோமோ என்று எண்ணத் தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஆவிக்குரிய இஸ்ரவேலர் களுக்குத் தேவையான பல பாடங்களைக் கொண்டுள்ளது. ஆகையால், நம்பிக்கையோடு நாம் தொடர்ந்து கவனிப்போம்.

## I. எகிப்து தேசம் போல் இராது (வ. 10)

இரண்டாம் தலைமுறை இஸ்ரவேலர்களிடத்தில் தேவன் பேசின வாக்குத்தத்த வார்த்தைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், புதிய ஆண்டு, பழைய ஆண்டு போல் இராது என்பது.

பரலோக தேவன் மற்றும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஆகியோரது சிறப்புகள் என்று சொல்லுவதற்கு ஏராளமானவைகள உண்டு. சொல்லப்போனால், அவைகளைச் சொல்லி மாளாது. ஆயினும், அவைகளில் ஒன்று, "தேவையான நேரத்தில் தேவையான வார்த்தைகளைப் பயன்படுத்துவது. ஆம், பயப்படும் நேரத்தில், " நீங்கள் பயப்படாதிருங்கள்", திடன் கொள்ளுங்கள்.... என்று கூறுகிறார். (ஏசா 35:4). ஒரு கட்டத்தில் இயேசு தங்களை விட்டுச் சென்ற பிறகு என்ன செய்வோமோ என்று அவருடைய சீடர்கள் கலங்கின போது, "உங்கள் இருதயம்

கலங்காதிருப்பதாக " என்று சொன்னார். (யோவான் 14:1) காயீன் ஊர் கைம் பெண் தன் ஒரே மகனுக்காக அழுது புலம்பிய போது, இயேசு "அழாதே" என்று கூறினார் (லூக். 7:12-13) இப்படிப்பட்ட தேவனும் அவருடைய குமரன் இயேசு கிறிஸ்துவும் தான், நீங்கள் சுதந்தரிக்கப் போகிற தேசம், எகிப்து தேசம் போல் இராது என்று கூறுகின்றனர்.

இஸ்ரவேலர்கள் எகிப்திலே பட்ட பாடுகள் என்ன கொஞ்சமா, நஞ்சமா? சொல்லுவதற்கு. அவர்கள் ஒடுக்கப்பட்டார்கள் (யாத். 1:11). "கொடுமையாய் வேலை வாங்கப்பட்டார்கள்" (யாத். 1:13). "கடுமையாக நடத்தப்படடார்கள்" (யாத். 1:14). ஆனால், தேவன் அப்படியே விட்டு விடவில்லை. அவர்கள் கூக்குரலைக் கேட்டு, கண்ணீரைக் கண்டு, பலத்த செய்கைகளைக் கொண்டு அவர்களை விடுவித்தார். அவர்கள் புசிக்கும்படியாக வானத்திலிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மன்னாவைக் குறித்து ஆவியானவர் என்ன கூறுகிறார் பாருங்கள். "*உன் பிதாக்கள் அறியாத மன்னாவினால் வனாந்தரத்திலே உன்னைப் போஷித்து வந்தவருமான உன் தேவனாகிய கர்த்தரை மறக்க வேண்டாம்....*" (உபா. 8:16). இங்கே கவனிக்க வேண்டியது என்னவெனில், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மன்னா, "முன்பின் அறியாதது". என்பது. யாரும் இதுவரை கண்டோ, கேள்விப்பட்டோ இராதது. அவரு டைய உண்மைப் பிள்ளைகளாய் வாழ்கிறவர்களுக்கு அவரால் நேசிக்கப்படுகிறவர்களுக்கு அவர் எப்பொழுதும் ஆச்சரியமானவைகளையே செய்யச் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

ஒரு புதிய ஆண்டுக்குள்ளாகப் பிரவேசித்து நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கும் நமக்கு, அன்றைக்கு மோசேயைக் கொண்டு வெளிப்பட்ட வார்த்தைகள் ஒருவகையில் பொருந்துகிறதாவே உள்ளது. ஆம், தேவனுக்குப் பயந்து, கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வோமானால் (மத். 6:33) நம்முடைய வாழ்விலும் ஆச்சரியமான காரியங்களை நடப்பிப்பார். கழிந்து போன ஆண்டிலே நமக்குச் சவாலாக இருந்து நம்மைக் காயப்படுத்தின, வேதனைப்படுத்தின, கண்ணீரை வரவழைத்த எகிப்துகள் நம்மைத் தொடராது. ஆம், இது காலால் நீர்ப்பாய்ச்சுகிற வருடமாக இல்லாமல், வானத்து மழைத் தண்ணீரைக் குடிக்கிற தேசமாக இருக்கும்.

ஆகையால், அருமையானவர்களே! விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும்,இப்புதிய ஆண்டின் காரியங்களில் நம்மை ஈடுபடுத்துவோம்.

## II. கர்த்தர் விசாரிக்கும் தேசம் (வ. 12 a)

இரண்டாம் தலைமுறை இஸ்ரவலர்களிடத்தில் தேவன் பேசின வாக்குத்தத்த வார்த்தைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், புதிய ஆண்டு கர்த்தர் விசாரிக்கும் ஆண்டாக இருக்கும் என்பது.

"விசாரிப்பு" என்பது ஒரு சிறப்பு வார்த்தை. விருந்து வேளைகளில் உணவு பரிமாறுகிறவர்கள் இருப்பார்கள். அவர்களைத் தான் "பந்தி விசாரிப்புக்காரர்கள்" என்று சொல்லுவோம். அவர்கள் வேலை, பந்தியில் அமர்ந்திருப்பவர்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்பது மட்டுமல்ல. மாறாக, தேவையானவைகளைத் தேவையான அளவுக்குக் கொடுப்பது. கானா ஊர் கல்யாணத்தில் தனது முதலாம் அற்புதத்தை நடப்பித்த இயேசு. வேலைக்காரரைப் பார்த்து, திராட்ச ரசத்தை " இப்பொழுது மொண்டு, பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போங்கள்" என்றார் (யோவான் 2:8). எதற்காக அப்படிச் சொன்னார்? குறைவிலிருப்பவர்களுக்கு அவைகளைக் கொடுக்கும்படியாக. ஆக, விசாரிப்பு என்பது குறைவை நீக்குவது மற்றும் தேவையைச் சந்திப்பது.

இங்கே பாருங்கள், தேவன் இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கும் தேசம், கர்த்தர் விசாரிக்கும் தேசமாக இருக்குமாம். ஒரு மனிதனுக்கோ, ஒரு குடும்பத்திற்கோ, ஒரு தேசத்திற்கோ இதைவிட வேறு என்ன ஆசீர்வாதம் வேண்டும்? விசாரிப்பது ஒரு மனிதனாக இருந்தால், இருப்பது தீர்ந்தவுடன் "மரியாதையாக" முழிப்பான். அது எப்படி என்று நீங்கள் முழிக்கிறீர்களா? அதாவது, என்ன செய்வது என்று தெரியாமல், " திரு திரு " என்று முழிப்பான். அப்படித்தானே! ஏனென்றால், ஒரு எல்லைக்கு மேல் அவனால் செயல்பட முடியாது. அதுவே, தேவன் விசாரிக்கிறவராக இருந்தால்? குதிபோட்டுக் கொண்டு திரியலாமே. எதற்குமே கவலைப்படத் தேவையில்லைதானே. ஏனெனில், அவருடைய வல்லமைக்கு எல்லையேதும் இல்லை. பூமியும் அதின் நிறைவும் அவருடையது. அந்த தேவன் தான், நான் உங்களை விசாரிக்கிறேன் என்று சொல்லுகிறார். சொன்னபடி இஸ்ரவேலர்களை விசாரித்தாரா இல்லையா? அவருடைய வாக்கைக் கேட்டு அவர்கள் வாழ்ந்த காலமெல்லாம் அவர்களை விசாரித்தார்.

அந்த தேவன் தான், புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழும் நம்மையும் விசாரிக்கிறேன் என்று பேதுருவைக் கொண்டு சொல்லியுள்ளார். " அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் " (1பேதுரு 5:7) என்று. ஆம், சர்வ வல்ல தேவன் புதிய ஏற்பாட்டின் கீழாக வாழும் நம்மையும் விசாரிக்கிறவராக இருக்கிறார். ஆகையால், புதிய ஆண்டுக்குள் பிரவேசித்து வாழ்ந்து கொண்டு கொண்டிருக்கும் நாம் எதற்கும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. எல்லாம் வல்ல தேவன், எல்லாம் உடைய தேவன் நம்மைத் தாங்கி நடத்துவார். இந்த வாக்குத்தத்தங்களும், ஆசீர்வாதங்களும் புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய இஸ்ரவேலர் களுக்குத் தான் என்பதை மறந்து விடாதீர்கள்.

அப்படியானால், யாரெல்லாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்கள் என்ற கேள்வி வருகிறது. அவர்கள் யாரென்று தெரிந்து கொள்வதற்.கும், எப்படி என்று புரிந்து கொள்வதற்கும் பெரிய வேத ஞானம் ஒன்றும் அவசியமில்லை. வேத வசனங்களின் வெளிச்சத்தில் நடக்க வேண்டுமென்ற விருப்பமும், உண்மையை ஏற்றுக்கொள் ளும்படியான திறந்த மனதும் இருந்தால் போதுமானது. ஆம், அது போதும். அப்போஸ்தலனாகிய பவுல், கலாத்தியா நாட்டிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு அதாவது, கிறிஸ்துவின் உபதேசப்படி ஒருவனைக் கிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக் கொடுத்தவர்களுக்கு எழுதின போது, நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், *ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்*" (கலா. 3:29) என்றார்.

ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியார் யார் என்று இப்பொழுது விளங்குகிறதா? ஆவிக்குரிய இஸ்ரவேல் என்பவன் தன்னை கிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்க வேண்டும். ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பின் திட்டத்தில் கடைசிப்படி. அதற்கு முன்பாக விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்திருக்க வேண்டும். நான் சொல்லும் இக்காரியங்கள் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படியானது. தேவன், பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த எல்லோரையும் நான் விசாரிக்கிறேன் என்று கூறாமல், சரீர இஸ்ரவேலர்களை மாத்திரம் தான் விசாரிக்கிறேன் என்று கூறியுள்ளார். புதிய ஏற்பாட்டின் காலத்திலும் அவர் அதே வழிமுறையைத் தான் பின்பற்றுவார். ஆகவே, நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாக இருப்பது அவசியம். அப்படியானால், நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் உபதேசப்படி ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாக உள்ளோமா?.

அருமையானவர்களே! பரலோக தேவன் இப்புதிய ஆண்டில் நம்முடைய குறைவுகளையெல்லாம் நீக்கி, தேவைகளையெல்லாம் சந்தித்து, கண்ணீரையெல்லாம் துடைத்து, காத்து, வழிநடத்துவதற்கு நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களா என்பதை உறுதி செய்து கொள்ளுவது முக்கியம். ஒருவேளை அப்படி இல்லாமல் இருப்போமானால் நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாக மாறி அவர் நம்மை வருடம் முழுவதும் விசாரிக்க அனுமதி கொடுப்போம்.

### III. கர்த்தர் கண் வைக்கும் தேசம் (வ. 12 b)

இரண்டாம் தலைமுறை இஸ்ரவேலர்களிடத்தில் தேவன் பேசின வாக்குத்தத்த வார்த்தைகளிலிருந்து நமக்குக் கிடைக்கிற இன்னுமொரு பாடம், புதிய ஆண்டு முழுவதும் கர்த்தரின் கண்கள் நம்மேல் இருக்கும் என்பது.

தேவதாசனாகிய மோசே சொன்ன வார்த்தைகளை இன்னும் ஒருமுறையாக கவனியுங்கள். " .... வருஷத்தின் துவக்க முதல் வருஷத்தின் முடிவு மட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும் " (உபா. 11:12) எப்படியிருக்குமோ என்ற ஏக்கப் பெருமூச்சோடு புதிய தேசத்தில் பிரவேசிக்கத் தயாராகிக் கொண்டிருந்த இஸ்ரவேலர் களுக்கு நம்பிக்கையையும், தைரியத்தையும் ஊட்டின தேவன், வருடத்தின் துவக்கம் முதல் முடிவு மட்டும் என் கண் உன் மேல் இருக்கும் " என்று கூறுகிறார். இரக்கமும், மன உருக்கமும் கொண்ட தேவ கண்கள் வருடம் முழுவதும் இஸ்ரவேலர் மீது இருந்திருக்குமானால் வாழ்க்கையில் எதற்காகவாகிலும் அவர்கள் கவலைப்பட வேண்டி இருந்திருக்குமா? கண்டிப்பாக இருந்திருக்காது.

அந்த தேவன் தான் நம்மீதும் கண்களை வைத்து நம்மை வழிநடத்தப் போகிறார். ஆம், வருடத்தின் எல்லா நாளும்! வழி நடத்தும் தேவ கண்கள் பற்றி நாளாகம ஆசிரியர் எப்படிக் கூறுகிறாரென்று பாருங்கள். "தம்மைப் பற்றி உத்தம இருதயத் தோடிருப்பவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது...." (2 நாளா 16:9) என்று. ஆம், வருடம் முழுவதும் கண் வைக்கும் தேவன், தம்முடைய கண்களை எல்லோர் மீதும் வைக்காமல், "தம்மைப் பற்றி உத்தம இருதயத் தோடிருப்பவர்களுக்கு" என்று ஒரு "க்கு" வைக்கப்பட்டிருப்பதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது. அவருடைய கண்கள் படுவதற்கு, அவரைப் பற்றிய "இருதயம்" இருந்தால் மட்டும் போதாது. தேவனைப் பற்றிய "உத்தம இருதயம்" இருக்க வேண்டும்.

"உத்தமம்" என்ற வார்த்தை மிகவும் அலாதியானது. பரிசுத்த ஆவியானவர் இவ்வார்த்தையை தேவன் மீது நம்பிக்கை வைத்த எல்லோருக்கும் பயன்படுத்தாமல், நோவா, யோபு, காலேப் போன்ற தேர்ந்த பக்திமான்களுக்கே பயன்படுத்தியுள்ளார். இவ்வார்த்தைக்குச் சொந்தமாய் வாழ்ந்தவர்கள், தேவ சித்தத் தைத் தங்கள் வாழ்க்கையில் அப்படியே நிறைவேற்றியிருக்கி றார்கள். ஆம், "நோவா, அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்" என்றுள் ளது (ஆதி. 6:22). யோபு அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும், என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்" என்றான் (யோபு. 14:15). காலேப், ".... நானோ என் தேவனாகிய கர்த்தரை உத்தம மாய்ப் பின்பற்றினேன்" என்றான் (யோசுவா 14:8).

அருமையானவர்களே! இப்படி உத்தமமாகப் பின்பற்றி வாழ்ந்தவர்கள் எல்லோரும் தேவன் அவரவர்கள் வாழ்ந்த காலத்தில் எவைகளையெல்லாம் செய்யும்படி கட்டளை

கொடுத்தாரோ அவைகளையெல்லாம் அப்படியே நிறைவேற்றி யிருக்கிறார்கள். நோவா, யோபு போன்றவர்கள் முற்பிதாக்கள் காலத்தைச் சேர்ந்தவர்கள். ஆதாம் முதல் மோசே காலம் வரைக்குமான முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு வாய்மொழிப் பிரமாணமே கொடுக்கப்பட்டது. அவைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்து உத்தமமாய் வாழ்ந்திருக்கிறார்கள். மோசே காலத்தில் வாழ்ந்த காலேபுக்கும், மற்ற இஸ்ரவேலர் களுக்கும் பத்துக் கற்பனைகள் உட்பட ஒரு 613 கட்டளைகள் கொடுக்கப்பட்டது. காலேப் போன்றவர்கள் அவைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிந்து உத்தமமாய் வாழ்ந்திருக்கிறார்கள்.

அப்படியானால், நானும், நீங்களும் உத்தமமாய் வாழ் வதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்கிறீர்களா? சிலுவைக் குப் பின்னால் வாழும் நாம் உத்தமமாய் வாழ்வதற்கு கிறிஸ்து வின் உபதேசம் கொடுக்கப்பட்டிருக்கிறது (யோவான் 14:26; 16:13) கிறிஸ்துவின் வார்த்தைகள் அடங்கிய இந்த உபதேசங்கள் தான் நம்மை இறுதி நாளில் நியாயந்தீர்க்க இருக்கிறது (யோவா. 2:48). அந்த உபதேசச் சட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் கீழ்ப் படிந்து வாழ்வது தான் உத்தமமாய் வாழ்வது என்பதின் பொருள். அப்படியானால் நாம் உத்தமமாய் வாழ்ந்து கொண்டுள்ளோமா?

உத்தமர்களிடத்தில் தான் தேவன் தமது வல்மையை விளங்கப் பண்ணுகிறார். உத்தமர்களோடு தான் தேவன் வருடத்தின் துவக்க முதல் வருடத்தின் இறுதி வரை இருக்கிறார். உத்தமர் களுடைய வாழ்க்கையில் தான் அவர் ஏற்ற காலத்தில் நன்மை செய்கிறார். உத்தமர்களுடைய வாழ்க்கையில் தான் தானியத்தை யும், திராட்ச ரசத்தையும், எண்ணெயையும் தரும்படி முன்மாரி யையும், பின் மாரியையும் கட்டளையிடுகிறார் (உபா. 11:14) புரிகிறதா?

அன்பானவர்களே! சத்தற்ற புத்தாண்டு வாழ்த்துக்களை நம்பி கர்த்தர் கொடுத்த புதிய ஆண்டை வீணாக்கி விடாதீர்கள். கிறிஸ்துவின் கிருபையுள்ள வார்த்தைகளுக்கு உங்களைச் சமூலமாக ஒப்புக்கொடுத்து, இந்தப் புதிய ஆண்டை, பழைய ஆண்டுபோல் இல்லாமல், எல்லாவகையிலும் ஆசீர்வாதமான ஆண்டாக மாற்றிக் கொள்ளுங்கள்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!! ❁


## ஊழியர்கள் சிறப்பு முகாம்

*நாள் :* **பிப்ரவரி 20-22 (திங்கள் - புதன்)**

**(திங்கள் காலை 10 :00 மணி முதல் - புதன் மதியம் 1:00 மணி வரை)**

*இடம் :* **ராம்ஸ் பங்களா, ஏற்காடு.**

தொடர்புக்கு : **98427 - 30382** (முன்பதிவு அவசியம்)

# ஏன் நாங்கள் சாத்தான் இருப்பதை விசுவாசிக்கிறோம்?

## Bro. J.C. சோட்

இந்த நாகரீக காலத்தில், சாத்தான் இருப்பதாக ஒருவன் ஏன் நம்ப வேண்டும் என்று சிலர் ஆச்சரியப்படலாம். மனிதன் விண்வெளிக்குச் செல்கின்ற இந்தக் காலகட்டத்தில் நிச்சயமாகவே பிசாசு போன்றவைகள் எல்லாம் எடுபடாது என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படி வாதம் செய்கிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால், சாத்தான் இருக்கிறான். அவன் வாழ்கிறான். தேவன், கிறிஸ்து எப்படி இருக்கிறார்களோ அப்படியே பிசாசும் இருக்கிறான். அவன் உலக முழுவதிலும் வாழ்கிறான். அவனுடைய கிரியைகள் எங்கும் தெரிகிறது. அவனுடைய செல்வாக்கு ஒவ்வொருவரிடத்திலும் காணப்படுகிறது. அதுமட்டுமல்ல, அவன் உலகத்தில் இருக்கிறான் என்று வேதாகமம் போதிக்கிறது. அவன் மனிதனல்ல, ஆனால், அவன் ஒரு ஆவி, அசுத்த ஆவி, தேவனும், கிறிஸ்துவும் எதற்கு அடையாளமாக இருக்கிறார்களோ, அதற்கு நேர் எதிரானவன். தவறான மற்றும் கெட்டவைகளுக்கு பின்னால் அவன் எப்போதுமே இருக்கிறான். அவன் பிசாசு என்றும், துன்மார்க்கன் என்றும், பொய்க்குப்பிதா என்றும், இந்தப் பிரபஞ்சத்தின் தேவன் என்றும் அழைக்கப்படுகிறான். அவன் அந்தகாரம், பாவம் மற்றும் துக்கம் போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்கிறான். அவன் மரணத்தை உண்டாக்கி, நித்திய அழிவைக் கொண்டு வருகிறான். அவன் நம்முடைய சத்துருவாக இருக்கிறபடியால், அவனைப் பற்றி நாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். நாம் அவனை எந்த அளவுக்கு அறிந்து, அவன் கிரியைகளைப் புரிந்து வைத்திருக்கிறோமோ, அந்தளவுக்கு அவனைச் சந்திக்க நாம் நம்மை ஆயத்தமாக்க முடியும். இதற்கேற்ற அறிவும், முறையான போராயுதமும் இல்லையானால், அவனால் நம்மை வஞ்சித்து, மேற்கொண்டு அழித்துப் போட முடியும்.

இப்போது நாம் தேவனுடைய வார்த்தைக்குப் போய், சாத்தானைப் பற்றியும், அவனுடைய கிரியைகள் பற்றியும் பேசுகின்ற சில வசனங்களை வாசிப்போம். இயேசு, நிலத்தின் களைகள் பற்றிய உவமையை விளக்கும் போது, களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர் என்றும், அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு என்றும் சொன்னார் (மத்தேயு 13:38,39).

பேதுரு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதினார். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்;

விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான் (பேதுரு 5:8). பவுல் சாத்தானை சோதனைக்காரனாகச் சொல்கிறார். ஆகையால், நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத் தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு அவனை அனுப்பினான் (தெசலோனிக்கேயர் 3:5). இயேசுவின் நாட்களில் வாழ்ந்த மதப்பிரிவினர், கர்த்தர் பெயெல்செபூலின் வல்லமையினாலே பிசாசுகளைத் துரத்தினார் என்று குற்றஞ் சாட்டினார்கள். அப்பொழுது பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவும் காணவுதக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு; தாவீதின் குமாரன் இவர்தானோ? என்றார்கள். பரிசேயர் அதைக்கேட்டு: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல் செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி : தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போய்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும், எந்த வீடும் நிலை நிற்க மாட்டாது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத்தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலை நிற்கும்? நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயத்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக்கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படி கொள்ளையிடக் கூடும்? கட்டினானே யாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம், என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" (மத். 12:23-30) என்று வாசிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய யோவான் இவ்விதமாக எழுதினார். "பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்" (யோவான் 2:14). யோவான் தொடர்ந்து இப்படியாகச் சொல்கிறார். " நாம் ஒருவரிலொருவர் அன்பு கூற வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்;

அவன் எதினிமித்தம் அவனை கொலை செய்தான்; தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே " (யோவான் 3:11-13). "மறுபடியும் யோவான், தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான்; பொல்லாங்காள் அவனைத் தொடான். நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்" என்று (யோவான் 5:18,19). பின்பு வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான், "உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடே கூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள் " என்று (வெளி. 12:9). மேலும், பிசாசுக்கு என்ன நடந்தது என்பதை விவரிக்கும் போது, யோவான் " ஒரு தூதன் பாதாளத் தின் திறவு கோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்திறங்கி வரக்கண்டேன்; பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலு சர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டி வைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின் மேல் முத்திரை போட்டான் என்றான், அதற்கு பின்பு அது கொஞ்சக் காலம் விடுதலையாக வேண்டும்" (வெளி. 20:1-3) என்றான்.

கிறிஸ்து தம்முடைய நாட்களில் வாழ்ந்த சிலரைப் பார்த்து, "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதி முதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை; அவனும் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியினாலே அவன் பொய் பேசும் போது தான் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான், நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை" (யோவா. 8:44,45). இயேசு தம்முடைய சீஷர்களிடம் இதைச் சொன்னார். " இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை " (யோவான் 14:30). பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு, "எங்கள் சுவிசேஷம் மாற பொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறை பொருளாயிருக்கும். தேவனுடைய சாயலிலிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒலி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் (1 கொரி. 4:3,4) என எழுதினார்.

ஆனால், இந்த சாத்தான் எங்கே இருந்து வந்தான்? என்று நீங்கள் கேட்கலாம். எல்லாவற்றையும் உண்டாக்கினது

தேவனாயிருக்கிறபடியால் (ஆதி. 1:1) இந்த சாத்தானையும் அவனோடுச் சேர்ந்த எல்லா தேவ தூதர்களையும் உண்டாக்கினது தேவனே. பிசாசு தன்னைத்தான் உயர்த்தி, தன்னை உண்டாக்கின வருக்கு எதிராக கலகம் செய்து, தேவனுடைய சத்துருவாக மாறினான். II பேதுரு 2:4 இவ்விதமாய்ச் சொல்கிறது " பாவஞ் செய்த தூதர் களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிக ளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப் பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து" என்று. மேலும், பேதுரு தேவன் கருத்து என்னவென்றால், நாம் தேவனையும் அவருடைய சித்தத்தையும் எதிர்த்தால், அதற்கான விளைவை நாம் அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். யூதா 6 ஆம் வசனத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம். " தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர் களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலி களினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார் ". நியாயத்தீர்ப்பு நாளிலே கிறிஸ்து துன்மார்க்கரைப் பார்த்து இவ்விதமாகச் சொல்வார். சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்." (மத். 25:41) என்றார்.

படைப்பின் ஆரம்ப காலத்திற்கு நாம் திரும்பும் போது, ஆதாமையும், ஏவாளையும் தேவன் சிருஷ்டித்த பிறகு, ஏதேன் தோட்டத்தில் அவர்களை வைத்து, தோட்டத்திலிருக்கிற சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தார். இதன் மூலம், விலக்கப் படும் கனியைப் புசித்தால் அவர்கள் சாகவே சாவார்கள் என்று தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இப்போது நாம் வாசிப்போம். "தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவனகளைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி; நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங் களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து; நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனி யைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது, சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி; நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர் களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து தன் புருஷனுக்கும் கொடுத் தாள்; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய

கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச் சைகை உண்டு பண்ணினார்கள். பகலில் குளிர்ச்சியான வேளை யிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது, ஆதாமும், அவன் மனைவி யும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். அப்பொழுது, தேவனாகிய கர்த்த ஆதாமைக் கூப்பிட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்; நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக் கொண்டேன் என்றான். அப்பொழுது அவர்; நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தா யோ என்றார். அதற்கு ஆதாம்; என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனா கிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்; சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள் " (ஆதி. 3:1-13).

விலக்கப்பட்ட கனியைப் புசித்த அந்த நாளிலே மனுஷ னும், மனுஷியும் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்து விட்டார்கள். ஆனால், தேவன் தொடர்ந்து ஆதாம், ஏவாள், சர்ப்பம் மற்றும் எல்லா சிருஷ்டிகளின் மீதும் சாபத்தை சுமத்திக் கொண்டிருந்தார். மத்தேயு நான்காம் அதிகாரத்தில், சோதனைக்காரனான சாத்தா னே கிறிஸ்துவிடம் வந்தான். அவர் இயேசு தன்னைப் பார்த்துக் கொள்ளும்படி மூன்று வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளில் இயேசு தனக்குப் பணிந்து போகும்படி முயற்சி செய்தான். ஆனால், ஒவ்வொரு முறையும் கிறிஸ்து "எழுதியிருக்கிறதே" என்பதாக பதில் அளித்தார். இறுதியில், பிசாசு தோற்றுப் போனவனாக அவரை விட்டுப் போனான்.

சாத்தானின் மீது இயேசு பெற்ற மிகப்பெரிய வெற்றி கல்லறையிலிருந்து அவர் உயிரோடு எழுந்ததுதான்; இயேசு உயிரோடு எழுந்ததின் மூலம் தாம் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபித்தது மட்டுமல்ல, எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை சாத்தி யப்படுத்தி, ஒவ்வொருவருக்கும் எதிர்கால உயிர்த்தெழுதலை நிச்சயப்படுத்தினார். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாயிருக்கிற யாவரையும் அவர் இரட்சித்து, எல்லா சோதனைகளையும் மேற்கொள்ள அவர்களுக்கு உதவி செய்து, கடைசியாக பரலோகத்திற்கு அவர்களை அழைத்து செல்வார் என்கின்ற வாக்குத்தத்தம் இருக்கிறது.

என் நண்பர்களே, சாத்தானை பழைய பிசாசை உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டாம். இந்த உலகத்தின் காரியங்களைக் கொண்டு சாத்தான் உங்களை வசப்படுத்திக்கொள்ள நீங்கள் அனுமதிக்க வேண்டாம். இந்த உலகத்தின் காரியங்களாகிய மாம்சத்தின் இச்சை, கண்களின்

இச்சை, ஜீவனத்தின் பெருமை போன்றவைகளை சாத்தான் உங்களுக்கெதிராகப் பயன்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டாம். தவறான மதம், மனுஷனுடைய போதனைகள் போன்றவைகளைப் பயன்படுத்தி சாத்தான் உங்களை வழிவிலகிப் போகச் செய்ய நீங்கள் அனுமதிக்க வேண்டாம். தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம், சத்தியத்தின் அழகையும், நித்திய ஜீவனின் வழியையும் விவரிக்கிறது. அதே நேரத்தில், முடிவான மரணத்தை கொண்டு வருகின்ற சாத்தானின் தந்திரத்தையும், வஞ்சகமான வழிகளையும் குறித்து எச்சரிக்கிறது.

சாத்தானுக்கு விரோதமாக எச்சரிக்கையாயிருங்கள். அவனால் வஞ்சிக்கப்படாதிருங்கள். தேவனுடைய வார்த்தையை வாசியுங்கள், படியுங்கள். கர்த்தரையும், அவருடைய வழிகளையும் கற்றுக் கொள்ளுங்கள். அதே வேளையில், உங்கள் எதிராளியாகிய சாத்தான் பற்றி வேத வசனங்களிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள். பிதாவாகிய தேவனிடத்திலும் விசுவாசம் வையுங்கள். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் " (எபி. 11:6).

நாம் தேவனை விசுவாசித்தால், கிறிஸ்துவையும் விசுவாசிக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 14:1-3). நாம் கிறிஸ்துவைப் பின்பற்றும்படி சாத்தானிடமிருந்தும், பாவங்களிடமிருந்தும் எல்லா தவறான, மோசமான காரியங்களிடமிருந்தும் திரும்ப வேண்டும். எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டுள்ளதாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது (அப். 17:30). நாம் மனந்திரும்பவில்லையென்றால் கெட்டுப் போவோம் என்று கிறிஸ்து சொல்லியுள்ளார். (லூக். 13:3). கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று நாம் அறிக்கை செய்ய வேண்டும் (மத். 10:32). நாம் மனுஷருக்கு முன்பாக கர்த்தரை அறிக்கை செய்தால், அவர் நம்மை பரலோகத்திலிருக்கிற பிதாவுக்கு முன்பாக அறிக்கை செய்வார். கடைசியாக, நம் பாவ மன்னிப்பிற்காக தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட வேண்டும் அல்லது ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறோம். நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, ஞானஸ்நானம் பெற்றால் அவர் நம்மை இரட்சிப்பதாகச் சொல்கிறார் (மாற்கு 16:16). நாம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றால் பாவமன்னிப்பைப் பெறுவோம் என்று பேதுரு சொல்கிறார் (அப். 2:38). நாம் அதைச் செய்யும் போது, கர்த்தர் நம்மை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (அப். 2:47). இதன் மூலம் நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருப்போம் (2 கொரி. 5:17). இவைகளை செய்தால், நாம் ஒருபோதும் சாத்தானுடையவர்களாக இருக்க மாட்டோம்; ஆனால், கிறிஸ்துவினுடையவர்களாயிருந்து கிறிஸ்தவர்களென்று அழைக்கப்பட்டு (1 பேதுரு 4:16) மரணபரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து பரலோக வீட்டை பெற்றுக்கொள்வோம் (வெளி. 2:10; வெளி. 22:14).

# நிழலும், நிஜமும்

(The Shadow and the Reality)

## Bro. ஜேம்ஸ் ராஜ்குமார்

அன்பானவர்களே,

இந்த நிழலும் நிஜமும் தலைப்பின் செய்தியை வாசிக்கின்ற திருமறை ஆசான் பத்திரிக்கையின் வாசகர்களாகிய உங்களுக்கு நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே என் மனமார்ந்த நன்றியையும், புதிய ஆண்டின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்ற மாதத்தில் எருசலேம் கூட்டத்தில் கிறிஸ்துவின் அப்போஸ்தலராகிய பேதுருவின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தோம். அதோடு அதனுடைய விளக்கங்களையும் கவனித்துக் கொண்டிருந்தோம். அதனுடைய தொடர்ச்சியாக அப். 15:10-ல் கடைசி வாக்கியமாக பேதுரு, "நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?" என்றார். உண்மையில் இது ஒரு சாதாரண மான கேள்வி அல்ல, முதலாவது இது பரிசுத்த ஆவியானவரின் கேள்வி என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். பழைய ஏற்பாடாகிய நியாயப்பிரமாணத்தையும் கிறிஸ்தவர்கள் கை கொள்ள வேண்டும் என்று பிடிவாதமாகப் பேசிக் கொண்டிருந்த, யூதர்களாயிருந்து கிறிஸ்தவர்களானவர்களைப் பார்த்து பரிசுத்த ஆவியானவர் பார்த்து கேட்டது ஆகும். இந்தக் கேள்வி அங்கு அமர்ந்திருந்த அனைவருக்கும்கூட ஒரு அதிர்ச்சியாக இருந்தது.

ஏனென்றால், தேவனை சோதிப்பது எவ்வளவு பெரிய பாவம் என்பதும் அதினாலே எவ்வளவு பெரிய தண்டனை கிடைக்கும் என்பதும் எருசலேம் கிறிஸ்தவர்களுக்கு தெரிந்த விஷயம். அவர்கள் பழைய ஏற்பாட்டு சரித்திரம் அறிந்தவர்கள், பழைய ஏற்பாட்டின் காலச் சரித்திரத்திலே இஸ்ரவேலர்கள் தேவனைச் சோதித்ததினால் தேவன் அவர்களுக்காக வாக்குத் தத்தம் பண்ணி ஆயத்தம் செய்த கானான் தேசத்தில் பிரவேசிக்க முடியாமல் தேவனால் தள்ளப்பட்டார்களே. இதைக் குறித்து சங்கீதக்காரரான தாவீது, இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர் களாகில், வனாந்திரத்தில் கோபமூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத் தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னை சோதித்து, என்னை பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள். நாற்பது வருஷகாலமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லை

யென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார். (சங். 95:8-11).

தேவனைச் சோதித்தால் என்ன நடக்கும் என்பது இங்கே திட்டமாக விவரிக்கப்பட்டுள்ளது. முதலாவது, இஸ்ரவேலர்கள் தேவனுடைய கோபத்திற்கு ஆளாக்கப்பட்டார்கள். இரண்டாவது, தேவனுடைய ஆசீர்வாதங்கள் முழுமையாக இழந்து விட்டார்கள். ஏன் அவர்களுக்கு இந்த நிலமை வந்தது? ஏனென்றால், அவர்கள் தேவனை சோதித்தார்கள். ஏன் இஸ்ரவேலர்கள் தேவனை சோதித்தார்கள்? ஏன் அவருடைய கோபத்திற்கு உள்ளானார்கள்?, ஏன் அவருடைய ஆசீர்வாதத்தை பெற வில்லை? இந்த மூன்று கேள்விகளுக்கும் ஒரே பதில் அவர்கள் *தேவனுடைய வழியை அறியாமல் வழுவிப்போனார்கள்.* தொடர்ந்து இஸ்ரவேலர்கள் அப்படிச் செய்ததினால் அவர்களுக்கு தேவன் கொடுத்த பழைய உடன்படிக்கையையும் அவமாக்கிப் போட்டார்கள், ஆதலால், பழைய ஏற்பாட்டின்படி அல்லாத புதிய உடன்படிக்கை பண்ணப்போவதாக அல்லது ஏற்படுத்தப் போவதாக எரேமியாவின் காலத்திலே அதாவது, பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே தேவன் திட்டம் செய்து முன் கூறினார், (எரே. 31:31-33). இதைக் குறித்து நாம் பின்பு விவரமாக கவனிக்கலாம்.

இந்த எருசலேம் கூட்டத்திலே பரிசுத்த ஆவியானவர் நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்? என்று புதிய ஏற்பாட்டின் காலத்திற்கு வந்துவிட்ட நம்மைப்பார்த்து கேட்டதின் அவசியத்தையும் எச்சரிக்கையையும் நாம் இப்பொழுது உணர்ந்தாக வேண்டும். புதிய ஏற்பாட்டின் காலத்திற்குள் வந்துவிட்ட நாம் இன்றைக்கு தேவனுடைய வழி (திட்டம் அல்லது நோக்கம்) என்ன என்பதை அறியாவிட்டால் நாமும் தேவனுடைய எல்லா ஆசீர்வாதத்திலிருந்து விழுந்து விடுவோம் அல்லது தள்ளப்பட்டு விடுவோம் என்பது தான் இந்த எச்சரிக்கையாயிருக்கிறது.

தேவனுடைய இன்றைக்கான வழி என்ன என்பதைக் குறித்து சிந்திக்கும்போது, அப்போஸ்தலனாகிய பேதுரு, எருசலேமில் சாலமோன் மண்டபத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. மோசே பிதாக்களை நோக்கி; உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவி கொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் செற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான், (அப். 3:22,23; உபா. 18:18-9. மோசேயினுடைய திட்டமான இந்தச் சொல் என்னவென்றால், புதிய ஏற்பாட்டின் காலத்தில் மேசியாவான கிறிஸ்துவுக்கு செவி கொடுக்க வேண்டும் என்பதுதான் அவருக்குச் செவி கொடுக்கவில்லையென்றால் நிர்மூலமாக்கப்படுவோம்.

மோசே தன் இஷ்டமாக இதைச் சொல்லவில்லை, கர்த்தர் மோசேயை நோக்கிச் சொன்ன வார்த்தை இது, (உபா. 18:17).

இதைப் பேதுரு தற்செயலாக அல்லது மோசேயின் வார்த்தைக்காக மட்டும் சொல்லவில்லை. தான் உணர்த்தப்பட்ட தாலும், எச்சரிக்கப்பட்டதாலும் தான் திட்டமாகச் சொல்லுகிறார். (மத். 17:1-7) (உங்கள் வேதாகமத்தை திறந்து இந்த வசனப் பகுதியை நன்றாக ஒருமுறை வாசித்துக் கொள்ளுங்கள்) இயேசு கிறிஸ்துவானவர் தம்முடைய அப்போஸ்தலர்களான பேதுரு, யாக்கோபு அவனுடைய சகோதரன் யோவானையும் கூட்டிக் கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போனார். அங்கே, அவர்களுக்கு முன்பமாக மறுரூபமானார். அப்பொழுது மோசே, எலியா ஆகிய இரண்டு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இயேசுவோடு பேசுகிறவர்களாகக் காணப்பட்டார்கள்.

அந்தச் சூழ்நிலையைக் கண்ட பேதுரு, பயந்து, அங்கேயே இருப்பது நல்லது என்று யோசித்து இயேசுவுக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான். இதற்கு மற்ற அப்போஸ்தலரும் எதிர்ப்பு ஒன்றும் சொல்லவில்லை. பேதுரு அப்படி பேசிக்கொண்டிருக்கும் போது, இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. ***இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்*** என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டா யிற்று. ***சீஷர்கள் அதைக்கேட்டு, முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்.***

இது ஏறக்குறைய ஒரு சிட்சையைப்போல இருந்தது. ஏன் இந்த எச்சரிக்கை அல்லது சிட்சை? முதலாவது, இயேசுவான வரை மோசே, எலியாவுக்குச் சமமாக எண்ணினார்கள் அது மிகப் பெரிய தவறு. கிறிஸ்துவை மற்ற தீர்க்கதரிசிகளுக்குச் சமமாக யோசிக்கக்கூடாது என்பதற்காக தேவன் இந்த நிகழ்ச்சியின் மூலமாக அப்போஸ்தலருக்கு ஒரு பாடத்தை வலியுறுத்தி உணர்த்தினார். அதோடு வரப்போகிற நாட்களில் அதாவது புதிய ஏற்பாட்டு காலத்தில் கிறிஸ்துவுக்கு மாத்திரம் கீழ்ப்படிய வேண்டும் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு மாத்திரம் செவி கொடுக்க வேண்டும் என்பதை இந்த நிகழ்ச்சி அவர்களுக்கு வலியுறுத்தினது. இது அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் அல்ல நமக்கும்கூட அதே பாடத்தை இந்நிகழ்ச்சி வலியுறுத்துகிறது. (மாற்கு 9:2-13; லூக். 9:28-36).

ஆகையால், இயேசுவானவர் தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி; நீங்கள் என் உபதேசத்தில் (கிறிஸ்துவின் உபதேசத்தில்) நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப் பீர்கள் (கிறிஸ்துவின் சீஷராயிருப்பீர்கள்) சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் (யோவான் 8:31,32) நாம் இன்றைக்கு கிறிஸ்துவின் சீஷர்களா யிருக்க வேண்டுமா அல்லது மோசேயின் சீஷர்களாயிருக்க

வேண்டுமா என்கிற ஒரு தீர்க்கமான முடிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனென்றால், இன்றைக்கு நாம் பரலோகம் போவதற்கு இரண்டு வழியை தேவன் ஏற்படுத்த வில்லை ஒரே வழியைத்தான் ஏற்படுத்தினார் அந்த வழி கிறிஸ்து இயேசுவே. அவருடைய புதிய ஏற்பாட்டு சத்தியமே நம்மை நித்திய ஜீவனுக்கு வழி நடத்தும்.

ஆகையால், இயேசுவானவர் யோவான் 14:6ல் .... நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். இயேசுவானவர் நானே ஜீவனும் சத்தியமும் வழியுமாயிருக்கிறேன் என்று சொல்ல வில்லை. மாறாக, நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக் கிறேன் என்றார். ஏனென்றால், இயேசுவே வழி. அந்த வழி அவருடைய சத்தியத்தால் மட்டும் உண்டாயிருக்கிறது. அந்த வழி யாகப் போனால் மட்டுமே ஜீவனுக்கு அல்லது நித்திய ஜீவனுக்குப் போக முடியும். அதாவது, பிதாவினிடத்திற்குப் போக முடியும். இதுதான் கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின் காலத்தில் தேவனுடைய திட்டம் மற்றும் தீர்மானமாய் இருக்கிறது.

இப்படியிருக்க கிறிஸ்து மற்றும் மோசேயின் மூலமாய் இரண்டு வழிகளில் நித்திய ஜீவனுக்கு, பரலோகத்திற்கு அல்லது பிதாவினிடத்திற்கு போக வேண்டும் என்று யூத சகோதரர்கள் நம்பினதால், அப்படி மற்றவர்களை போதிக்கும்படி கட்டாயப் படுத்தி தேவனுடைய திட்டத்தை நோக்கத்தை மாற்றினதால் தேவனை சோதித்தார்கள். ஆகையால், பேதுரு அவர்களைக் கடிந்து கொள்வது அவசியமாயிற்று. இதன் தொடர்ச்சியை அடுத்த மாதத்தில் கவனிப்போம்.

**(தொடரும்)**

## நாளும், நடப்பும்

1. தானே புயல் கடலூர் மற்றும் புதுவையில் கோரத்தாண்டவம் ஆடியிருக்கிறது.
2. வெளிநாடு வாழ் இந்தியர்களுடன் முதலீடு செய்ய கோரிக்கை.
3. அதிகாரிகளின் அலட்சியத்தால் காவிரியாற்றில் அடித்துச் செல்லப்பட்டது.
4. ஏழைகளுக்கு அரசு மருத்துவ காப்பீட்டுத் திட்டம் மீண்டும் ஆரம்பம்.
5. ஜாதிய வேறுபாடுகளை ஒழிக்க மனித உரிமைக் கல்வி சமூக நீதி அமைச்சகம் பரிந்துரை.
6. இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் மரியாதையை இழந்து வருகிறது.

## பெண்கள் பகுதி

# "கிரியைகளுடன் கூடிய விசுவாசம்"

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையான சகோதரிகளே! இப்புதிய ஆண்டிலே மீண்டும் இப்பகுதியின் மூலமாக கர்த்தருடைய வார்த்தைகளைக் கற்றுக்கொள்ள தேவன் செய்த மிகப்பெரிய கிருபைக்காக முதலாவது அவருக்கு நன்றிகளை ஏறெடுப்போம்.

கிறிஸ்தவ வாழ்க்கையே விசுவாசத்தின் மூலமாகத்தான் கட்டப்படுகிறது. நம். ஆவிக்குரிய வளர்ச்சியை மேலும், மேலும் வளர்த்துக் கொள்ள விசுவாசம் மிக, மிக அவசியம். ஆனால், அந்த விசுவாசமானது கிரியைகளுடன் கூட இருக்க வேண்டும். கிரியை என்றால் செயல்பாடு அல்லது செய்தல் என்று அர்த்தம். கிரியை இல்லை ஆனால், எனக்கு விசுவாசம் இருக்கிறது என்று நாம் சொல்வோமானால் அதினால் என்ன பிரயோஜனம்? யாருக்கு பிரயோஜனம்? விசுவாசம் மட்டும் இருந்தால் இரட்சிப்பு கிடைத்து விடுமா? ஒரு சகோதரியோ, சகோதரனோ உணவு, உடை இல்லாமல் நம்மிடம் வந்து உதவி கேட்பார்களானால் அவர்களிடம் நன்றாகப் பேசி, சமாதானத்தோடே போங்கள், உங்களுக்காக ஜெபம் செய்கிறேன், குளிர் காய்ந்து இளைப்பாறுங்கள் என்று சொல்லி விட்டு, சரீரத் தேவைகளை செய்யாமல் வெறும் வாய்ப்பேச்சோடே அனுப்பினால் என்ன பிரயோஜனம்? அது போலத்தான் விசுவாசமும், அது கிரியை இல்லாமல் இருக்குமானால் அது செத்ததாயிருக்கும்.

அருமையானவர்களே, வழக்கம் போல நாம் கற்றுக் கொள்ளக்கூடிய கிரியைகளுடன் கூடிய விசுவாசத்தை நாம் பெற்றுக் கொள்ள வேதாகமத்திற்குள் சென்று தேவன் வெளிப்படுத்தியுள்ள காரியங்கள் என்ன என்று பார்ப்போம். அப்போஸ்தலர் நடபடிகள் 9 ஆம் அதிகாரம் 36 முதல் 42 முடிய உள்ள வசனப்பகுதியில் "தொற்காள்" என்ற ஸ்திரீயை பார்க்கிறோம். லூக்கா ஆசிரியர் இப்புத்தகத்தை எழுதுகிறார். அவர் ஒரு மருத்துவர், காரியங்களை திட்டவட்டமாக செய்யக் கூடியவர் இந்த சுவிசேஷ மருத்துவர். இவள் ஒரு சீஷி என்று குறிப்பிடுகிறாள். சீஷி என்று சொல்லும்போது கற்றுக் கொள்பவள் என்பது பொருள். மேலும், அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய் செய்து கொண்டு வந்தாள் என்று வாசிக்கிறோம். தொற்காள் தனக்கிருந்த விசுவாசத்தை கிரியை

களின் மூலமாக, அதாவது தேவையில் இருப்பவர்களுக்குத் தேவையான சில அத்தியாவசியமானவைகளை கொடுப்பத்ன் மூலமாக செயல்படுத்தினாள். அவள் வியாதிப்பட்டு மரணமடைந்த பின்பு, சீஷர்கள் இந்த செய்தியை பேதுருவுக்கு தெரிவிக்க பேதுரு வந்து அவளை உயிரோடே எழுப்பி உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான் என்று (37-41) வாசிக்கிறோம். இந்த தொற்காள் மூன்று காரியங்களை நமக்கு கற்றுக் கொடுக்கிறாள்.

**முதலாவது கிரியைகளுடன் கூடிய விசுவாசம்:**

நாம் ஏற்கனவே பார்த்த மாதிரி தொற்காளின் விசுவாசம் கிரியைகளுடன் இருந்தது. தேவனை நேசிக்கிறோம் என்று சொல்வதுடன் நிறுத்திக் கொள்ளாமல் நம் கிரியைகள் மூலம் தேவனை நேசிக்க வேண்டும் என்ற உண்மையை தொற்காள் மகிவும் நன்றாக அறிந்திருந்தாள். மத். 25:34-36 வசனங்களில் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்கு உதாரணமாக தொற்காள் வாழ்ந்திருக்கிறாள். தேவையில் இருப்பவர்களுக்கு உதவி செய்வதின் மூலம் தனக்குச் சேவை செய்வதாக இயேசு கூறியிருக்கிறார். தேவன் தனக்குக் கொடுத்ததை தொற்காள் மறைத்து வைக்கவில்லை. ஒரு தாலந்துக்காரனைப் போல (மத். 25:14-30). ஞாயிற்றுக் கிழமை கிறிஸ்தவளாக இல்லாமல், செயல்படுபவளாக, கிரியை மூலம் தன் விசுவாசத்தை மக்கள் கண்டு கொள்ளும்படியாய் வாழ்ந்தாள்.

**இரண்டாவதாக, தொற்காள் தேவையை பார்த்தாள் தேவையை நிறைவேற்றினாள்:**

கடற்கரைப் பட்டணமாகிய யோப்பாவில், அடிக்கடி இன்றைய நாட்கள் போல் சேதங்கள் வந்திருக்கும். கணவனை, பெற்றோரை இழந்தோர் இருந்திருப்பார்கள். இவைகளையெல்லாம் பார்த்த தொற்காள் சும்மா உட்கார்ந்து யோசித்து ஏன் யாருமே இவர்களுக்கு உதவவில்லையே என்று கேட்கவுமில்லை, சபையில் உள்ள மூப்பர்களிடம் சென்று யாராவது ஒருவர் கட்டாயம் இவர்களுக்கு உதவ வேண்டும் என்று சொல்லவுமில்லை, முடியாத ஏழைகளைப் பார்த்து குறைகூறவுமில்லை. மாறாக, தேவன் தனக்குக் கொடுத்த ஊசியையும், நூலையும் எடுத்தாள். துணிகளை தைத்தாள். தங்களுக்கே தாங்கள் உதவி செய்ய முடியாமல் இருந்தவர்களுக்குக் கொடுத்தாள். II கொரி. 8:11,12-ல் பவுல் கூறுவது போல மனவிருப்பத்தோடு அதை செய்து நிறைவேற்றுவது அவசியம். நமக்கு இருப்பதில் உதவிட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். பொருளாதார பற்றாக்குறை தீரட்டும் பிறகு பார்க்கலாம் என்று தள்ளிப் போடக் கூடாது. தருணங்கள் கிடைக்கும் போது உடனே செய்து விட வேண்டும்.

**மூன்றாவதாக, தொற்காள் சபையை தன் குடும்பமாக எண்ணினாள்:**

வேதாகமத்தில் தொற்காளின் குடும்பத்தைப் பற்றி எதுவுமே கூறப்படாததால், ஒரு

வேளை அவள் ஒரு விதவை யாயிருந்திருக்கலாம் அல்லது திருமணமாகாதவளாக இருந்தி ருக்கலாம் என்று தெரிகிறது. இதுவே இவள் சபையோடு அதிக ஐக்கியம் கொண்டு சபை யை தன் குடும்பமாக எண்ணி யதற்கு காரணமாயிருந்தது. அவள் மரித்த போது கூடியி ருந்த சபையார்களைப் பார்க் கும் போது இது நமக்கு நன்றாக விளங்கும் (அப். 9:39,41).

பொதுவாக, கணவன், பிள்ளைகள், பெற்றோர், பேரக் குழந்தைகள் என்று இருக்கும் கிறிஸ்தவப் பெண்கள் கிறிஸ்து வை முதலாவது வைக்க சிரமப் படுகிறார்கள். தேவனிடமி ருந்து நம்மை பின்னுக்குத் தள் ளும் குடும்பத்தாரிடம் கொஞ் சம் தூர விலகி நிற்பதே நல்லது. ஆமோஸ் தீர்க்கன் 3:3-ல் ஒரு கேள்வியைக் கேட்கிறார். இரண்டு பேர் ஒருமனப்பட்டி ருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ? என்று ஆவிக்குரிய வாழ்க்கையில் இது எவ்வளவு உண்மை! சபை யைச் சாராத நம் உறவுகளோடு நாம் அதிக நேரம் செலவிடவே கூடாது. நம்முடைய வேலை வேறு, அவர்களுடையது வேறு. வேதாகமத்தைப் பற்றியும், தேவனைப் பற்றியும், இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவர் களோடு கலந்துரையாடவும் முடியாது, கருத்து பரிமாற் றமும் செய்ய முடியாது. நாம் அதிகப் பிரியத்தோடு கைக் கொண்டிருக்கிற விசுவாசத்தை அவர்களோடு பகிர்ந்து கொள்ள இயலாது. பரலோகத்தை இலக்காக வைத்து வேதம் சொல்கிறபடி வாழ்கிறவர்க ளோடு தான் ஐக்கியம் கொள்ள வேண்டும். மாறாக, நம்மை யும், தேவனையும் பிரிப்பவர்க ளோடு ஐக்கியம் வைக்கக் கூடாது.

அருமையானவர்களே! குடும்பப் பொறுப்பு நமக்கு அவசியம்தான், அதைவிட மேலான பொறுப்பு தேவன் மேல் நமக்கு இருக்கிறது. இதை அது மேற்கொள்ள அனுமதிக்கக் கூடாது.

தொற்காள் நாம் கால காலமாக தெரிந்த பாத்திரமாக இருந்தாலும் கிரியையில் மிகச் சிறந்த கிறிஸ்தவளாக வாழ்ந்தி ருக்கிறார்கள். செய்ய வேண்டி யவைகளை செய்யாமல் நாம் பாவஞ் செய்து கொண்டிருக் கிறோம். நன்மை செய்ய அறிந் தவளாயிருந்தும் அதை செய் யாமற்போனால் அது அவ ளுக்கு பாவமாயிருக்கும் என்று யாக். 4:17-ல் காண்கிறோம். விசுவாசம் கிரியைகளுடன் கூட இருந்தால் தான் பூரணராக முடியும் (யாக். 2:22).

ஒருவேளை செயல்படாத கிறிஸ்தவப் பெண்களாக இருந் திருப்போமானல் தேவன் கொடுத்த இந்த புதிய ஆண்டிலே செயல்பட்டு கிரியைகளுடன் கூடிய விசுவாசத்தை வளரச் செய்வோம். முயற்சி செய் வோம். தேவன் அதற்கு உதவி செய்வார். ஆமென்! ❁

வாலிபர் பகுதி

# இயேசுவை நாம் எப்படிக் காண்கிறோம் ?

Bro. பென்னிமார்ட்டின்

**வா**லிபர்களாகிய உங்கள் யாவருக்கும் வல்லவராம் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள்!. நம் எல்லோருக்கும் சில முக்கியமான காரியங்களைக் குறித்த உண்மையை அறிய வேண்டும் என்கிற ஆவல் இருக்கும். அவைகளைப் பற்றி நாம் விவாதிக்கும் போது முடிவு எட்டப் படவில்லையென்றால் நாம் திருப்தியடையமாட்டோம். இது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளுகிற விஷயத்திலும் உண்மையாயிருக்கிறது. அவரைப்பற்றி யாரோ ஒருவருடைய அபிப்பிராயத்தை அறிய நாம் விரும்புவதில்லை. யார் அந்த இயேசு? அவர் உண்மை யாகவே தேவனுடைய குமாரனா? ஜீவனைப் பற்றியும், இரட்சிப் பைப் பற்றியும் அவர் என்ன சொல்கிறார்? அதை அறிந்து கொள் வதற்கு நாம் போக வேண்டியது இந்த உலகத்திலேயே உண்மை யான, துல்லியமான வேத புத்தகத்திற்குத்தான். இயேசுவின் போதனைகளை நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள தேவன் நம் கை களில் அதைத் தந்திருக்கிறார். நம் அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி இவ்வுலகிலுள்ள மகான்கள் பல்வேறுப்பட்ட தத்துவங்களை உதிர்த்திருக்கிறார்கள். சிலர் அவரை மாபெரும் போதகரென்றும், மிகச்சிறந்த மனிதர் என்றும் அடையாளப் படுத்துகிறார்கள். ஆனால், இயேசுவை நாம் எப்படிக் காண்கி றோம்? அவரைப் பற்றி வேதாகமம் எப்படி விவரிக்கிறது என்பதை பார்க்கலாம்.

## I. அவர் இரட்சகராயிருக்கிறார் :

முதலாவதாக, வேத வசனங்கள் இயேசுவை இரட்சகர் என அழைக்கின்றன. இரட்சகர் என்கிற வார்த்தை மிகப்பெரிய ஆபத் திலிருந்து மற்றவர்களை காப்பாற்றுகிற ஒருவரைக் குறிக்கும். இயேசு ஒரு சாதாரண இரட்சகர் அல்ல, அவர் ஒரு தனித்துவம் வாய்ந்த இரட்சகர். உதாரணமாக எரிகின்ற ஒரு கட்டிடத்திலி ருந்து ஒரு மனிதன் ஒரு குழந்தையைக் காப்பாற்றினால் அவரை இரட்சகன் அல்லது காப்பாற்றுபவன் என்று சொல்கிறோம். இயேசு வேத வாக்கியங்களின்படி நம் பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கிறபடியால் அவரை நம் ஆவிக்குரிய இரட்சகர் என்ற ழைக்கிறோம் (மத். 1:21). பாவமானது ஆரம்பத்திலிருந்தே மனிதனுக்கு ஒரு பிரச்சனையாக இருந்து வருகிறது. இவ்வுலகில் அநேகர் தாங்கள் பாவிகள் என்பதை ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். பிரியமான வாலிபர்களே நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் பாவம் செய்திருப்போம், அந்தப் பாவங்களிலிருந்து நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முடியாது. நாம் பாவிகள் என்பதை நமக்குச் சொல்வதற்கு

வேதாகமே தேவையில்லை. நம் வார்த்தைகளை, நம் செயல்களை உற்று நோக்கினால், நாம் பாவிகள் என்பதை உணர்ந்து கொள்வோம். அப்படியென்றால், இந்தப் பாவத்திலிருந்து நம்மை யாரால் இரட்சிக்கக் கூடும்? மனோதத்துவத்தால் நம்மை மன்னிக்க முடியாது, நேர்மறையான சிந்தனை நம்மை மன்னிக்காது. அப்படியென்றால், நம் கதி என்ன? இயேசு இந்த உலகத்திற்கு வந்ததற்கான பிரதான நோக்கம் நம் பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும்படிக்குத் தான் (1 கொரி. 15:3).

இது சம்மந்தமாக நெப்போலியனுடைய படையில் ஒரு இராணுவ வீரனின் கதை நம் நெஞ்சைத் தொடுவதாக உள்ளது. அந்த வீரன் துணிச்சலுடைய, விசுவாசமுடைய வீரனாக இருந்தான். போருக்கிடையில், தன் கூடாரத்தில் அமர்ந்து தன் குடும்பத்தைப் பற்றியும், குடும்பத்திற்கு தான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைக் குறித்தும் சிந்தித்துக் கொண்டிருந்தான். ஒரு தாளில் தனக்கிருந்த கடனையும், தன் குடும்பத்தைப் பராமரிப்பதற்குத் தேவையான பணத்தையும் எழுதிக் கொண்டிருந்தான். தன் கடனை திருப்பிச் செலுத்துவதற்கும், குடும்பச் செலவிற்கும் தேவையான பணம் தன்னிடம் இல்லாததை எண்ணி சோர்வில் ஆழ்ந்து போனான். மிகுந்த மனச்சோர்வில் அந்தத் தாளின் அடிப்பகுதியில், இந்த கடனகளைத் தீர்ப்பதற்கு யார் இருக்கிறார்? என்று எழுதினான். பின்பு, தூங்கச் சென்று விட்டான். அந்த நாளில், நெப்போலியன் தன் வீரர்களின் கூடாரத்தைப் பார்வையிடும்படியும், அவர்களுடைய நிலைமை களை ஆராயும்படி திடீரென வந்தார். அப்போது தூங்கிக் கொண்டிருந்த அந்த வீரனையும், அவன் எழுதி வைத்திருந்த கடிதத்தையும் பார்த்தார். அப்போது நெப்போலியன் தன் பேனாவை எடுத்து நான் இதை கட்டித்தீர்ப்பேன் என்று எழுதினார். பிரியமானவர்களே, நம் பாவக்கடனை கட்டித் தீர்ப்பதற்கு இவ்வுலகில் நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாருண்டு?

## II. அவர் கிறிஸ்துவாயிருக்கிறார்

இரண்டாவதாக, இயேசு கிறிஸ்து, என்றழைக்கப்படுகிறார். கிறிஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள். கிரேக்க மொழியில் கிறிஸ்து என்பதும் எபிரெய மொழியில் மேசியா என்பதும் ஒன்றுதான். புதிய ஏற்பாடு இயேசுவை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஒருவராக, தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவராக அடையாளப்படுத்துகிறது. தீர்க்கதரிசிகள் கிறிஸ்து வரப் போவதை முன்னறிவித்தார்கள் (ஏசாயா 9:6,7). மீகாவின் தீர்க்கதரிசனத்தை சற்று உற்று நோக்குங்கள். எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப் போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது (மீகா 5:2). புதிய ஏற்பாடு தீர்க்கதரிசி களால் முன்னறிவிக்கப்பட்டவர் கிறிஸ்து என்பதை நிரூபிக்கிறது. இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் இறுதிப் பகுதியில்

தம்முடைய சீஷர்களுடன் பிலிப்புச் செசரியாவை நோக்கி சென்றுக் கொண்டிருக்கும்போது சீஷர்களிடம் இவ்விதமாகக் கேட்டார். மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும் வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளுள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள் (மத். 16:13,14). அவர்களுடைய பதிலுக்குப் பிறகு, இயேசு அவர்களைப் பார்த்து நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு பேதுரு நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சொன்னார் (மத். 16:15,16). பேதுருவின் பதிலுக்காக இயேசு அவரைப் பாராட்டினார். புதிய ஏற்பாடு இயேசுவை கிறிஸ்துவாக தேவனால் விசேஷமாக தெரிந்தெடுக்கப்பட்ட ஒருவராக அடையாளப் படுத்துகிறது. பிரியமான வாலிபர்களே, இப்படிப் பட்ட இயேசு வை நாம் தெய்வமாகப் பெற்றிருப்பது நாம் பெற்ற பாக்கியமாகும்.

## III. அவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார்

மூன்றாவதாக, புதிய ஏற்பாட்டு இயேசுவை தேவத் துவத்தில் ஒருவராக, தேவனுடைய குமாரனாக அடையாளப் படுத்துகிறது. யோவான் ஸ்நானன் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்திற்கு வழியை ஆயத்தப்படுத்துவதற்கு தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டார். அப்போஸ்தலனாகிய யோவான் இயேசு தேவனுடைய குமாரன் என்பதற்கு நமக்கு மூன்று சாட்சிகள் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவை களே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது (1யோவான் 5:8). பரிசுத்த ஆவியானவர் இயேசு ஞானஸ்நானம் பெற்று தண்ணீரி லிருந்து கரையேறினவுடனே, அவர்மீது புறாவைப் போல இறங்கி இயேசு தேவனுடைய குமாரன் என்று சாட்சி பகிர்ந்தார். 1 யோ. 5:8ல் ஜலம் என்பது இயேசுவின் ஞானஸ்நானத்தைத் தான் குறிக்க வேண்டும், அவர் ஞானஸ்நானம் பெற்று கரை யேறினவுடனே இவர் என்னுடைய நேசக்குமாரன் இவரில் பிரிய மாயிருக்கிறேன் என்று வானத்திலிருந்து தேவன் அறிவித்தார் (மத். 3:17). மேலும், இரத்தம் என்று யோவான் குறிப்பிடுவது இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்துகிறது. இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது நடந்த அற்புத சம்பவங்கள் இயேசுவின் தெய்வீகத்தன்மையை விவரிக்கிறது. இயேசு தேவனுடைய குமாரன் என்பதைக் குறித்து தேவனே, பரிசுத்த ஆவியானவரே சாட்சிக் கொடுக்கும்போது அதை விட லேமான சாட்சி யாருக்கும் அவசியமில்லை.

யார் இந்த இயேசு? இதற்கான பதிலைப் பற்றிய எந்த சந்தேகத்தையும் புதிய ஏற்பாடு விட்டு வைக்கவில்லை, இயேசு தேவனுடைய குமாரன் என்பதைத் தெளிவாகப் போதிக்கிறது. எனவே, இயேசுவை நம் இரட்சகராக, கிறிஸ்துவாக, தேவனு டைய குமாரனாகக் காண்போமென்றால் அவரிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள நாம் பாடு படுவோம். தேவன் தாமே அதற்கு உதவிச் செய்வாராக ஆமென்!.

# நிலவும், நீயும்

சிறுவர் பகுதி

**BRO. ABEL R. NAYAGAM**

**அ**ன்புத் தம்பிகளே! தங்கைகளே! 2012-ம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்.

தெளிவான வானில் இரவு நேரத்தில் முழு நிலாவைப் பார்ப்பது கண் கொள்ளாக் காட்சி. ஏதோ மிகப் பெரிய வெள்ளிக் கிண்ணம் நம் தலைமேல் தொங்குவது போல் தோன்றும். அந்த இரவில் நிலாவானது நம்மை நாம் மிகவும் சிறியவர்கள் என்று எண்ண வைக்கும். தேவ படைப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்க நாம் எம்மாத்திரம்?




நீண்ட காலத்துக்கு முன்பு தாவீது அரசன் இதே கேள்வியை கேட்டான். அவன் ஒரு மேய்ப்பனாயிருந்தபடியால் இரவு நேரங்களில் கண் விழித்து ஆடுகளை காத்துக் கொண்டிருந்தான். அந்த இருண்ட இரவுகளை வெளிச்சமாக்கிக் கொண்டிருந்த சந்திரனையும், நட்சத்திரங்களையும் பார்த்து சிந்தனை பண்ணிக் கொண்டிருந்திருப்பான். நிலாவும், சந்திரனும் ஒன்றுதான். தாவீது, எழுதின சங்கீதங்களில் ஒன்றில் உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத்திரங்களையும் நான் பார்க்கும் போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்றான் (சங். 8:3-4).

> சந்திரன் பூமியிலிருந்து 3,84,000 கி.மீ. தூரத்தில் உள்ளது. இது கிட்டத்தட்ட 10 முறை பூமியைச் சுற்றி வருவதற்குச் சமம்! பூமியிலிருந்து "ராக்கெட்" மூலம் நிலவு சென்று திரும்புவதற்கு சுமார் ஆறு நாட்கள் ஆகிறது.

தேவன் சிருஷ்டித்த சந்திரனை நினைக்கும் பொழுது தேவன் ஏன் மனுக்குலத்தின் மீது இவ்வளவு கரிசனையாய் இருக்கிறார் என்று வியப்படையச் செய்கிறதல்லவா? சூரியன்,

சந்திரன், நட்சத்திரங்கள் யாவும் நம்மை விட முக்கியத்துவம் வாய்ந்தவை போல் தோன்றுகிறது. ஆனால், தாவீது சொல்வதைப் பாருங்கள். தேவ தூதரிலும் மனிதனை சற்றும் சிறியவனாக்கியிருக்கிறார். மகிமையிலும், கனத்தினாலும் முடிசூட்டியிருக்கிறார் என்று. அதாவது, மனிதர்களாகிய நமக்காகவே இந்த அண்ட சராசரத்தை உண்டாக்கினார் என்று.

அன்பு சிறுபிள்ளைகளே, நாம் தேவனுக்கு எவ்வளவு விசேஷமானவர்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். அடுத்த முறை முழுநிலா வானில் கெம்பீரமாகத் தோன்றும் போது பார்த்து சங்கீதம் 8ஐ நினைவுகூருங்கள். நாம் தேவனின் அற்புதப் படைப்பு என்றும் அவருக்கு நாம் மிகவும் முக்கியம் என்பதையும் மறந்து விடக்கூடாது. அத்தோடு, அந்த தேவாதி தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக வாழ இச்சிறு பிராயத்திலிருந்தே நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.



***1969*, ஜூலை *20*-ம் நாள் நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் காலடி எடுத்து வைத்தார். அப்பொல்லோ *11* என்ற விண்கலத்தின் கமாண்டர் அவர் தான். அதன் பிறகு, நிலவுக்கு 5 முறை சென்றிருக்கிறார்கள். அந்தப் பயணங்கள் நிலவு பற்றிய நம்முடைய புரிந்து கொள்ளுதலுக்கு உதவியாயிருக்கிறது.**

## நிலவைப் பற்றிய உண்மைகள்

பூமியைப் போல, சந்திரனும் சுற்றி வருகிறது. சந்திரன் ஒரு முறை சுற்றி வருவதற்கு $29^{1}/_{2}$ நாட்கள் ஆகிறது. அதே அளவு தான் சந்திரன் பூமியைச் சுற்றி வருவதற்கும் ஆகிறது. ஆகவே தான், நாம் சந்திரனின் ஒரு பக்கத்தை மாத்திரம் பார்க்கிறோம். 1950 - 1960 வரைக்கும் சந்திரனின் மற்ற பகுதியின் போட்டா எடுக்கப்படவில்லை.

சந்திரனின் வெளிப்புறப்பகுதி குளிர்ச்சியான எரிமலைக் குழம்புகளால் ஆகியுள்ளது. இந்த எரிமலைக் குழம்புகளின் மேல் ஒரு 4 அங்குலத்திற்கு பாறைத் துகள்கள் படர்ந்திருக்கிறது. சந்திரனில் உயிரினங்கள் வாழ்வதற்கு வாய்ப்பில்லை என்பதை இந்த பாறைத் துகள்களின் மாதிரி காட்டுகிறது. ❁

# சபையும், சந்தோஷமும்

**Bro. K. பாண்டியன்**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நாம் இன்றைய நாட்களில் பொதுவாக காணும் போது சபையில் உள்ளவர்களைப் பார்க்கிலும் இரட்சிக்கப்படாத மக்கள் தான் மகிழ்ச்சியாய் இருப்பதாகக் காண்கிறோம். ஆனால், உண்மையில் தேவ திட்டப் படி ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்துவின் சபையில் உள்ள மக்களே சந்தோஷமாக வாழ்வதற்கு தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட வர்கள் என வேதம் வலியுறுத்துகிறது. தேவ ஜனம் தன் நிலை மறந்து உலகக் கவலையில் மூழ்கியிருப்பதை ஆண்டவர் அறிவில் லாத காரியம் எனக் கண்டிக்கின்றார். அப்போஸ்தலனாகிய பவுல்; பிலிப்பு பட்டண சபையாருக்கு " கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாயிருங்கள் " என்றும் அதே வார்த்தைகளை தெசலோ னிக்கே சபையாருக்கும் வலியுறுத்தி எழுதியுள்ளார். தேவனுடைய வார்த்தைகளைக் கவனித்துப் பார்க்கும் போது சபையிலிருப்ப வர்கள் சந்தோஷமாயிருக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமாக இருக்கிறது.

சபை மக்கள், ஏன் சந்தோஷமாயிருக்க வேண்டும்? முதலாவது, தேவன் உங்களுக்கு தகப்பன் என்ற முறையில் நீங்கள் பிள்ளைகள் என்ற உறவின் அடிப்படையில் மகிழ்ச்சி ஏற்பட வேண்டும். ஒரு மனிதன் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படியும் போது பாவமன்னிப்பின் சந்தோஷம் மூலம் இந்த மகிழ்ச்சி ஆரம்பமாகிறது (அப். 2:41,46;8:39) இதை வேதம் மீட்பின் சந்தோஷம் என்றழைக்கின்றது. அதாவது, நீங்கள் உங்கள் இருளான வாழ்க்கையிலிருந்து, பொய்யான தெய்வங் களிடமிருந்து, உங்கள் ஆன்மா நரகத்திற்கு செல்லும் பேரழிவி லிருந்தும் மற்றும் பிசாசின் பிடியிலிருந்தும் *மீட்கப்பட்ட*தால் அதை உணர்ந்து சபையில் சந்தோஷமாகக் கூடி வரவேண்டும். அந்த சந்தோஷ உணர்வு மற்றவர்களுக்கும் பரவும்படியாகத்தான் சபை கூடுதலின் முக்கிய நோக்கமாக தேவன் வைத்திருக்கின்றார் (எபி. 10:24) இந்த உண்மையான மகிழ்ச்சியான உணர்வுகளை ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டும் என்றே இயேசு ஆண்டவர் வந்தார் (லூக். 4:18).

உலகச் செழிப்பும், வறுமையும் இந்த சந்தோஷத்தை பாதிக் காது. மனுஷனுடைய கைப்பெலனும் சாமர்த்தியமும் அவன் சம்பாத்தியத்திற்கு காரணம் என்று எண்ணாதபடிக்கு தேவன் எச்சரிக்கின்றார் (உபா. 8:17) அப்படி எண்ணி தேவனை அசட்டை பண்ணுபவர்கள் குறைவுபட்டு போவார்கள் என்பது நிச்சயம் (உபா. 28:47) அதே போல, வசதிக்குறைவுள்ளவர்கள்

உண்ணவும், உடுக்கவும் குறித்தான கவலையை விலக்கி, எல்லோருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிற தேவன் மீதே விசுவாசமாயிருக்க வேதம் போதிக்கின்றது. எனவே, அஞ்ஞானிகளைப் போல் நாம் கவலைப்படக் கூடாது. உடைகள் விஷயத்தில் பெண்கள், ஆண்கள் உடைகளை அணிவது அருவருப்பானது என்பது வேதம் மட்டுமே சுட்டிக் காட்டும் உண்மையாகும் (உபா. 22:5). சிறுபிள்ளைகளுக்கும் நாம் தகுதியான உடைகளை அணியச் செய்ய வேண்டும். உடை விஷயத்தில் சபையார் உலக மக்களை பின்பற்றி நாகரீகம் என்ற பெயரில் மோசம் போகக்கூடாது. முக்கியமாக விசுவாசிகளுடைய பெயர்கள் பரலோகத்தில் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருப்பதற்காக சந்தோஷப்பட வேண்டும். வாக்காளர் பட்டியலில் இடம் பெற மக்கள் படும்பாடு நாம் அறிவோம். ஆனால், உண்மை சந்தோஷம் உங்கள் பெயர்கள் பரலோகில் எழுதப்பட்டிருப்பதற்காக (லூக். 10:20) இருக்க வேண்டும். அதே நேரத்தில் கிறிஸ்துவின் உபதேசப்படி நடவாதவர்களுடைய பெயர்கள் அங்கு கிறுக்கிப் போடப்படும் அபாயமும் உண்டு என்பதை மறவாதீர்.

அருமையான விசுவாசியே நீ சபை கூடி வரும் போது தேவனுக்கு முன்பாக அவருடைய சந்நிதியில் இருப்பதால் சந்தோஷப்பட வேண்டும் (உபா. 12:7) எங்கே 2 அல்லது 3 பேர் இயேசுவின் நாமத்தில் கூடுகிறார்களோ அங்கு ஆண்டவராகிய தேவ குமாரன் மத்தியில் இருப்பதால் அது தேவ சந்நிதியே. அங்குதான் ஆனந்தமும், நித்திய பேரின்பமும் உண்டு என்று தாவீது தன் அனுபவத்தில் பாடியுள்ளார் (சங். 16:11) இப்படியாக சபையில் மக்கள் கூடி வரும்போது தேவனுடைய வசனத்தை கவனிக்கும் சிலாக்கியமும், தேவனை பணிந்து கொள்ளும் பாக்கியமும் அதினால் நம் பெலவீனங்கள் நீங்கி தேவனுக்குள் மகிழ்ச்சியும் அடைகிறோம். இதுவே உங்களுடைய பெலன் (நெகே. 8:3-10) எனவே தான், விசுவாசிகள் ஆராதனைக்கு மட்டுமல்ல, வாரத்தின் இடைப்பட்ட நாட்களில் நடைபெறும் குடும்ப ஜெபம், வேத வகுப்பு போன்ற கூட்டங்களுக்கும், வருடத்தின் இடைப்பட்ட நாட்களில் நடைபெறும் கிறிஸ்துவின் சபையார் நடத்தும் வேதாகம கருத்தரங்குகள் மற்றும் வேனிற்கால முகாம்களுக்கும் அவசியம் கலந்து கொண்டு ஆவியில் பெலப்பட வேண்டும். அப்படி நாம் கூடி வரும் போது தேவனுடைய வார்த்தைகளை புசிக்கிறதினால் மகிழ்ச்சி உண்டாகிறது (எரே. 15:16) விருந்து சந்தோஷத்திற்கென்று ஞானி சாலமோன் சொல்வது போல கிறிஸ்துவின் பந்தியும் ஆவிக்குரிய சந்தோஷத்திற்கென்று தேவன் வைத்திருக்கின்றார். அது பழைய ஏற்பாடு காலத்திய பஸ்கா பண்டிகைக்கு ஒப்பாக இருக்கிறது என பவுல் குறிப்பிடுகிறார் (1கொரி. 5:7,8) ஆக கிறிஸ்துவின் சபைக்கு தான் உலகிலேயே அதிகமான பண்டிகைகள்! அதை மகிழ்ச்சியோடே நீங்கள் அனுசரிக்க வேண்டாமா?

சபையிலுள்ள மக்களை புதிய ஏற்பாடு விசுவாசிகள் என்று அழைக்கின்றது. காரணம் அவர்கள் தேவன் மீதும், அவரால் அனுப்பட்ட தேவகுமாரன் இயேசு ஆண்டவர் மீதும் நம்பிக்கை வைத்துள்ளனர் (யோவான் 14:1, 17:3) அந்த நம்பிக்கையே விசுவாசியின் இருதயத்தில் மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் ஏற்படுத்துகிறது (ஏசா. 12:2,3; ரோம 12:12) எந்தச் சூழ்நிலை யிலும் சிறுபிள்ளைகள் பெற்றோரை நம்பியிருப்பதைப் போல விசுவாசிகள் தேவனிடம் நம்பிக்கை வைத்து உள்ளார்கள். நம் சந்தோஷத்தின் அளவை பற்றி தாவீது கூறும் போது, அவர்க ளுக்கு தானியமும், திராட்சை ரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோஷத்தை என் இருதயத் தில் தந்தீர் (சங். 4:7) என்று கூறுகிறான். இப்படியிருப்பினும் அவரவர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஏதாவது குறைகள் இருக்கலாம். அந்த புலம்பலை மாற்றும் வல்லமை மனிதரிடம் அல்ல, நீங்கள் நம்பியிருக்கும் தேவனிடம் மாத்திரமே உள்ளது. அந்த தேவனிடம் நீங்கள் சபையாகக் கூடி வரும் போது மகிழ்ச்சி என்னும் கட்டினால் இடைக்கட்டப்படுகிறீர்கள் (சங். 30:11).

சபை மக்கள் உலகத்தாரைப் போல் தவறான வழியில் சந்தோஷப்படக்கூடாது. இதற்கு முன் உதாரணமாக, தேவதாசன் யோபு சொல்லியிருப்பதை கவனியுங்கள்; பிறன் மனைவியை நாடுவது, பொருளாசையை நாடுவது, ஏழ்மையை பரியாசம் பண்ணுவது, வேலைக்காரர் நியாயத்தை அசட்டை செய்வது, விரோதிகளின் ஆபத்தில் சந்தோஷம் அடைவது (யோபு 31:9-29) போன்ற தவறான சந்தோஷங்களை வேதம் கண்டிக் கின்றது. ஆண்டவர் இயேசு இவைகள் நம்மை தீட்டுப்படுத்தி தேவனிடமிருந்து பிரித்து விடும் என்கிறார். அப்போஸ்தலனா கிய பவுல் அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதில்லை எனத் தெளிவுபடுத்தியிருக்கிறார். மாறாக, நீங்கள் தேவ ஜனமாயிருக்கிறதினால் உங்களுக்கு தண்டனையா கிய ஆக்கினை இல்லை, சத்துரு இல்லை, உங்கள் நடுவே பரலோக தேவன் இருப்பதினால் எந்தத் தீங்கும் நேரிடாது என்று வேதம் உற்சாகப்படுத்துகிறது (செப். 3:14,15) சபையில் இருக்கும் போது தேவனிடமும், சக விசுவாசிகளிடமும் அன்பு உண்டா கிறது. அந்த அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும் (1கொரி. 13:6) அப்படிப்பட்ட சந்தோஷமும், மகிழ்ச்சியும் சபை வாழ்க்கையில் மாத்திரமே கிடைக்கும். அப்படிப்பட்ட அன்பு பாடுகளிலும் சந்தோஷத்தைக் கொடுக்கும் (1பேது. 4:12-14) எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவின் சபை யில் வழி நடத்தும் மேய்ப்பராக இயேசு ஆண்டவர் இருப்பதால் தேவன் உங்கள் கண்ணீர் யாவையும் துடைப்பார் (வெளி. 7:17) கிறிஸ்துவை நாம் பின்பற்றுவதால் தேவன் நம்மோடு இருந்து நம் வருத்தங்களையெல்லாம் ஒழியப் பண்ண தேவன் ஆயத்த மாயுள்ளார் (வெளி. 21:3,4) தேவ சமாதானம் உங்கள் அனைவ ரோடும் கூட இருப்பதாக ஆமென்.

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

## பாடம் - 15 புதிய இராஜ்ஜியம்

**Bro. K. பாஸ்கர்**

**அ**ன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

இந்த புதிய ஆண்டிலே இந்த தொடர் கட்டுரையின் மூலமாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டுகள் புதிதாகுகின்றன. ஆடைகள் புதிதாகு கின்றது. உலகின் பற்பல விஷயங்கள் புதிதாகுகின்றது. இதைப் படிக்கின்ற நீங்கள் புதிதாக வேண்டாமா? நீங்கள் புதிதாக வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். அந்த புதிய வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் இருக்கின்றன. ஒருவன் கிறிஸ்து வுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின ! (2 கொரி 5:17) என்று வேதம் கூறுகின்றது. இந்த புதிய ஆண்டிலே நீங்கள் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க புதிய இராஜ்ஜியம் என்ற இந்தக் கட்டுரை பயனுள்ளதாக இருக்கும். இதன் மூலம் வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அடையாளம் கண்டு கொள்ள பேருதவி யாக இருக்கும்.

### I. இராஜ்யம் என்றால் என்ன?

இராஜ்யம் என்றால் அரசாட்சி என்று பொருள். இது இயேசு கிறிஸ்து பேசின அரமேயு பாஷையில் மல்கூத் என்பதாகும். இது அரசாளும் உரிமை அல்லது இராஜரீகம் என்று அர்த்தப்படுத்து கிறது. இந்த வார்த்தையின் பொருள் தேவன் மட்டும் எல்லாரை யும் அரசாட்சி செய்யும் உரிமை பெற்றவர் என்று அடித்துச் சொல் கிறது. ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. (மத் 6:13) தேவனுடைய ஆளுகை ஒரு நாட்டையோ, ஒரு எல்லையையோ குறிக்காமல் மனுமக்களின் மனங்களை, இருதயங்களைக் குறிக்கின்றது. இந்த ஆவிக்குரிய ஆளுகையை, ஆட்சியை புரிந்து கொள்ளாமல், இஸ்ரவேலர் சரீரப்பிரகாரமான ஆட்சியை விரும்பினார்கள். ஆகையால் அவர்கள் சாமுவேல் தீர்க்கதரிசியிடம், "இதோ நீர் முதிர் வயதுள்ளவரானீர் உம்முடைய குமாரர் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை. ஆகையால் சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிற படி எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்றார்கள். எங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று அவர்கள் சொன்ன வார்த்தை சாமு வேலுக்குத் தகாததாய்க் காணப்பட்டது. ஆகையால் சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வ தெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள். அவர்கள் உன்னைத் தள்ளவில்லை. நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத்தான் தள்ளினார்கள் என்றார்" (1 சாமு 8:5-7)

தேவன் பரலோகத்திலிருந்து அவர்களை ஆட்சி செய்தார். அது மனுஷருடைய கண்களுக்கு பிரத்தியட்சமாக தெரியாமல்

இருந்தது. தேவனோடு நெருங்கியிருந்த சாமுவேலுக்குத் தெரிந்திருக்கிறது. ஆகையால், அவர்கள் சரீரப் பிரகாரமான ராஜா வேண்டும் என்று சொன்னதை தகாததாய்க் கண்டார். தேவன் ஆவிக்குரிய ஒருவராக இருக்கின்றார். அவருடைய ஆளுகை ஆவிக்குரியதாக இருக்கிறது என்பதை நாம் தேவனோடு நெருங்கி வாழும்போது நிச்சயமாய் உணர முடியும். ஆனால் இஸ்ரவேலர் உணரவில்லை. அதற்குக் காரணம், அவர்கள் மற்ற ஜனங்களைப் போல ஆடம்பரமாகவும், பாரம்பரியமாகவும் வாழ ஆசைப்பட்டார்கள். அவர்களின் விருப்பத்திற்கு தேவன் ஒப்புக் கொடுத்தார். அதன் முடிவு அழிந்து போனது. மனுஷ னுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு. அதன் முடிவு மரண வழிகள் (நீதி 16:25) அந்த மரண வழிகளில் இஸ்ரவேல் விழுந்தார்கள்.

இன்றும் அநேகர் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்து கொண்டு ஆடம்பர, பாரம்பரிய கிறிஸ்தவர்களாக வாழ ஆசைப்படுகின்றனர். ஆகவே தான் பண்டிகைகளையும், மாதம் பிறப்புகளையும் அனுசரித்து வருகின்றனர். (கொலோ 2:16) மேலும், ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆவிக்குரியவர் என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. ஆதலால் கிறிஸ்துமஸ், ஈஸ்டர் போன்ற பண்டிகைகளையும் கொண்டாடி வருகின்றனர். தவிர அவருடைய ராஜ்யத்தையும் ஆவிக்குரியதாகக் கருதவில்லை. ஆதலால் ராஜ்யம் வருவதாக என்று ஜெபித்து வருகின்றனர்.

இராஜ்யம் என்பதை ஆவிக்குரிய தன்மையில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் பரலோகத்திலிருந்து பூமியின் மனுமக்களை ஆட்சி செய்வதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவரே பூமியெங்கும் ஆட்சி செய்கிறவர். பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது (சங் 24:1). கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார். (சங் 99:1) அவரது வசனங்கள் பூச்சக்கரத்து கடைசி வரை செல்லுகிறது (சங் 19:4) உன்னதமானவராகிய கர்த்தர் பயங்கரமானவரும், பூமியின் மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார் (சங் 47:2) இந்த வசனங்கள் யாவும் தேவன் ஆவிக்குரிய நபராக பரலோகத்திலிருந்து பூமியெங்கும் ஆட்சி செய்கிறார் என்று கூறுகின்றது.

## II. கிறிஸ்துவும், அவரது ராஜ்யமும்

கிறிஸ்துவைப் பற்றியும் அவரது ராஜ்யத்தைப் பற்றியும் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு வந்தது. (ஏசா 2:2,3) (தானி 2:44) சரீரப் பிரகாரமுமான இஸ்ரவேலருக்கு ராஜ்யம் இருந்தும் தேவன் அவர்களுக்கு ஆவிக்குரிய புதிய இராஜ்யத்தைக் குறித்து தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்டு வந்தது (ஏசா 9:7) அவர்கள் ராஜ்யத்தை பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடத்தில் பறி கொடுத்து இஸ்ரவேலர் அனைவரும் பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டு போகப்பட்டனர். சிறையிருப்பில் எழுபது ஆண்டுகள் கழிந்தது. அதன் பிறகு பாபிலோனிலிருந்து தங்கள் சொந்த நாட்டிற்கு பாலஸ்தீன நாட்டிற்கு வந்தனர். சுமார் நானூறு ஆண்டுகள் அமைதி காலத்திற்குப் பிறகு காபிரியேல் தூதன் மரியாளிடத்தில் வந்து பயப்படாதே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய் இதோ நீ கர்ப்பவதியாக ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பேரிடு வாயாக அவர் பெரியவராக இருப்பார். உன்னதமானவருடைய குமாரன் எனப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின்

குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான் (லூக். 1:30-33) இயேசு கிறிஸ்து வின் பிறப்பைக் குறித்தும் அவருடைய இராஜ்யத் தைக் குறித்தும், அவருடைய ஆளுகை பற்றியும் கூறினான். நானூறு ஆண்டுகளுக்கு பிறகு தேவதூதன் கூறிய வார்த்தை அவர்களுக்கு ஆறுதலையும், தேறுதலையும் கொடுத்தது. ஆகவே, இயேசு கிறிஸ்துவின் வருகையை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தார்கள்.


இயேசு கிறிஸ்து பிறந்து ஊழியத்தைச் செய்யும் பொழுது அவருடைய வாயில் முதலில் சொன்ன வார்த்தை மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது (மத். 4:17) என்பதே! பரலோக இராஜ்யமும் தேவனுடைய இராஜ்யமும் ஒன்று தான் என்பதை போதித்தார் (மத். 19:23,24) அப்போஸ்தலன் பவுல் எழுதும் பொழுது தேவனுடைய இராஜ்யம், கிறிஸ்துவின் ராஜ்யமாகவும், கிறிஸ்துவின் சபையாகவும் இருக்கின்றது என்று எழுதினார். (எபே. 5:5 ரோமர் 16:16) இந்த கிறிஸ்துவின் ராஜ்யம் அப்போஸ்தலர் நாட்களில் எருசலேமில் ஸ்தாபிக்கப்படும் என்று இயேசு போதித்தார். (மாற். 9:1) அதன்படி கி.பி.33ல் எருசலேமில் இராஜ்யமாகிய சபை ஸ்தாபிக்கப்பட்டது. இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதின மும் சபையில் சேர்த்து கொண்டு வந்தார். (அப். 2:147) ஜூன் 1 ஆம் தேதி பள்ளிகள் திறந்ததால் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். அது போல பெந்தேகொஸ்தே நாளில் கிறிஸ்துவின் இராஜ்யம் திறக்கப்பட்டது இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

சுவிசேஷ புத்தகங்களில் இராஜ்யம் சமீபத்தில் இருந்தது. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் வரை இராஜ்யம் இருப்பதாகவும் அது செயல்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கின்றது. நாம் அநேக உபத்திரவத்தின் வழியாக தேவனுடைய இராஜ்யத்தில் பிரவே சிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர்கள் கூறினார்கள் (அப். 14:22) மேலும், அப்போஸ் தலனாகிய பவுல் அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்தில் உட்படுத்தி னவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறேன் என்றார் (கொலோ. 1:13).

இன்று அநேகர், இயேசு கிறிஸ்து முதலில் வந்தது பாவங் களை மன்னிக்கிறதற்காக வந்தார். அவர் இரண்டாம் முறை வருவது இராஜ்யத்தை ஸ்தாபிக்க வருவார் என்று நம்புகிறார்கள். ஆனால், வேத வசனத்தில் பார்க்கும்போது அவர் முதல் முறை வந்தபோது பாவங்களை மன்னித்து தம்முடைய இராஜ்யத்திலே நம்மை சேர்த் திருக்கிறார் என்றும், அவர் இரண்டாம் முறை வரும் போது அந்த இராஜ்யத்தை பிதாவின் கரத்தில் ஒப்படைப்பார் என்று கூறுகின்றது. (1 கொரி. 15:24) அதாவது, அவர் முதல் முறை வந்தது இராஜ்யத்தை ஸ்தாபித்து பரலோகத்திலே தேவனுடைய சிங்காசனத்தில் வீற்றிருந்து அரசாட்சி செய்ய (1 பேதுரு 3:22) அவர் மீண்டும் வருவது தமது ஆட்சி பொறுப்பை பிதாவின் கையில் கொடுக்கவே வருவார் என்று தெளிவாக கூறுகின்றது (1 கொரி. 15:24). ஆகவே, ராஜாதி ராஜா வாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கிற கிறிஸ்துவின் ராஜ்யத்தில் சுதந்திரம் பெற அவருக்குக் கீழ்ப்படியுங்கள். இந்த புத்தாண்டில் இந்த புதிய இராஜ்யத்தில் பிரவேசிக்க முன்வாருங்கள்.

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா,** மதுரை.

| | | | | |
|---|---|---|---|---|
| ØÃV]çï TV | சனி | காலை | 5:30 | மணி |
| >tw[ TV | ஞாயிறு | இரவு | 10:00 | மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்.

பேச்சாளர் : **சகோ. அர்ச்சுனன்,** வத்தலக்குண்டு.


| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| தமிழன் | TV | சனி | காலை 6:15 மணி |





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 4766/87 - Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month
Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014




( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )


# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| **பொதிகை TV** | ஞாயிறு | காலை | 5:30 | **மணி** |
| **தமிழன் TV** | திங்கள் | காலை | 7:00 | **மணி** |
| **தமிழன் TV** | சனி | காலை | 7:15 | **மணி** |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

**கீழ் காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**












## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

**ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.**

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam.